# அன்னை யாரோ!

(தொடர் நாடகம்)

நிர்மலா ராகவன்



# அன்னை யாரோ

நிர்மலா ராகவன்

FreeTamilEbooks.com

CC-BY-SA-NC

# அன்னை யாரோ


1. அன்னை யாரோ
    1. பாத்திரங்கள்
2. காட்சி - 1 (யமுனா, தாமரை)
3. காட்சி - 2
4. காட்சி - 3 (சிவம், அம்புஜம்)
5. காட்சி - 4 (சிவம், மாலதி, அம்புஜம்)
6. காட்சி - 5 (மாலதி, சிவம், அம்புஜம்)
7. காட்சி - 6 (அம்புஜம், மாலதி)
8. காட்சி - 7 (மாலதி, வனமாலா)
9. காட்சி - 8 (மாலதி, சம்பத்)
10. காட்சி - 9 (மாலதி, சம்பத்)
11. காட்சி - 10 (அம்புஜம், சிவம்)
12. காட்சி - 11 (சிவம், சம்பத், அம்புஜம்)
13. காட்சி - 12 (சம்பத், மாலதி)
14. காட்சி - 13 (மாலதி, வனமாலா)
15. காட்சி - 14 (மாலதி, மங்களா)
16. காட்சி - 15 (மாலதி, சம்பத், வனமாலா)
17. காட்சி - 16 ( அம்புஜம், மாலதி)
18. காட்சி - 17 (மாலதி, சம்பத்)
19. காட்சி - 18 (வனமாலா, யமுனா)
20. காட்சி - 19 (வனமாலா, யமுனா)
21. காட்சி - 20 (தாமரை, யமுனா)
22. காட்சி - 21 (மாலதி, சிவம்)
23. காட்சி - 20 (தாமரை, மாலதி)
24. காட்சி - 22 (மாலதி)
25. காட்சி - 23 (யமுனா, தாமரை)
26. காட்சி - 24 (யமுனா, தாமரை)
    1. FREETAMILEBOOKS.COM

2. கணியம் அறக்கட்டளை
3. நன்கொடை

# அன்னை யாரோ

அன்னை யாரோ

நிர்மலா ராகவன்

nirurag@gmail.com

மின்னூல் வெளியீடு : FreeTamilEbooks.com

உரிமை : CC-BY-SA-NC கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

This book was produced using pandoc

பதிவிறக்கம் செய்ய -
http://FreeTamilEbooks.com/ebooks/annai_yaro

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com
அட்டைப்படம்: லெனின் குருசாமி - guruleninn@gmail.com
மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் -
aishushanmugam09@gmail.com
மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை -
kaniyam.com/foundation

Ebook Publisher: http://freetamilebooks.com
Cover Image: Lenin Gurusamy - guruleninn@gmail.com
Ebook Creation: Iswarya Lenin -
aishushanmugam09@gmail.com
Ebook Project: Kaniyam Foundation -
kaniyam.com/foundation

பதிவிறக்கம் செய்ய -
http://freetamilebooks.com/ebooks/annai_yaro

This Book was produced using LaTeX + Pandoc

# பாத்திரங்கள்

- மாலதி – 25 வயது
- சிவம் – மாலதியின் தந்தை
- அம்புஜம் – மாலதியின் தாய்
- வனமாலா –தோழி
- சம்பத் – 35 வயது
- யமுனா – 17 வயது
- தாமரை – 50 வயதான சமூக சேவகி

# காட்சி - 1 (யமுனா, தாமரை)

**தாம:** யமுனா! நானும் இந்த ஆதரவற்ற இளம்பெண்கள் இல்லத்துக்கு வாராவாரம் வந்து போய்க்கிட்டிருக்கேன். ஒன்னைப்பத்தி எதுவுமே சொல்ல மாட்டேங்கிறியே! ஒன்னை ஏன் போலீஸ் பிடிச்சு, இங்க கொண்டு வந்து சேர்த்தாங்க?

**யமு: (மௌனம்)**

**தாம:** சொல்லும்மா. ஒன் பேரு யமுனாதானா, இல்ல..?

**யமு (ஆத்திரமாக):** அதில ஒங்களுக்கு சந்தேகமே வேணாம். அது எங்கம்மா எனக்கு வெச்ச பேருதான். அவங்களைத் தேடித்தான் நான் கோலாலம்பூருக்கு வந்தேன், ஆன்ட்டி.

**தாம(ஆச்சரியப்பட்டு):** அம்மாவை..! தேடியா? அப்போ இத்தனை நாள் நீ எங்கேயிருந்தே?

**யமு:** என்னை வளர்த்தாங்களே, வனமாலா! அவங்ககூட. கிழக்கு மலேசியாவிலதான் நான் நினைவு தெரிஞ்சதிலேருந்து இருந்திருக்கேன்.

ஆன்ட்டி! மூணு மாசத்துக்கு முந்தி ஒரு நாள்..

(இசை)

# காட்சி - 2

**வன(தனக்குள்):** ஐயோ! எனக்கு இப்படி ஒரு சோதனையா? கடவுளே! என்னை நம்பின அந்த சின்னப்பொண்ணு மாலதிக்கு நான் செய்த துரோகத்துக்கு இவ்வளவு காலம் கழிச்சு எனக்குத் தண்டனை குடுத்து வேடிக்கை பாக்கறியா? (கடந்த காலத்தைக் குறிக்கும் இசை)

# காட்சி - 3 (சிவம், அம்புஜம்)

**சிவ( அலறலாக):** அம்புஜம் ! இங்க வாயேன்.

**அம்:**எதுக்கு இப்படி அலர்றீங்க? வேலை தலைக்கு மேல கிடக்கறப்போ, பேப்பர் படிக்காட்டி என்ன?

**சிவ:** விஷயம் தலைக்கு மேல போயிடுச்சுடி. நம்ப சின்ன மாப்பிள்ளை இல்ல, அதான் மாலதியோட வீட்டுக்காரர்! அவர் ஒரு விபத்தில போயிட்டாராம். பேப்பரில மொதல் பக்கத்திலேயே பெரிசாப் போட்டிருக்கான்.

**அம்:** ஐயையோ!

**சிவ:** இதோ பாரு, அவர் போன ஸ்கூட்டர் எப்படி சப்பையா ஆயிருக்கு! சிவப்பு விளக்கில நிக்காம, வேகமா போயிருக்கார். எதிரே லோரிக்காரன்...

**அம்:** கடவுளே! இப்படி அல்பாயுசில போறதுக்குத்தானா நான் அருமை பெருமையா வளர்த்த பொண்ணை மயக்கிக் கூட்டிட்டுப் போனாரு! (அழுகிறாள்)

**சிவ:** இப்பக்கூட அவர்மேல வன்மமா? நல்லாவே இல்ல. (அழுகைக் குரலில்) இனிமே நம்பளை விட்டா, மாலதிக்கு யாரு இருக்காங்க?

**அம் (தனக்குள்):** நல்ல கூத்து! மருமகன் செத்துட்டாருன்னு பேப்பர்ல பாத்துத் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. ஒழுங்கு மரியாதையா இவ என்ன பண்ணி இருக்கணும்? 'அம்மா! ஒங்க பேச்சை மீறி நடந்ததுக்கு எனக்கு நல்ல தண்டனை கிடைச்சிடுச்சு. இனிமே நீங்கதான் கதி'ன்னு என்கிட்ட மன்னிப்பு கேட்டிருக்கணும். ம்! அவ புத்தி அவ்வளவுதான்! அதுக்காக நாம்ப விட்டுக்குடுக்க முடியுமா? பாக்கறவங்கதான் என்ன நெனைப்பாங்க?

# காட்சி - 4 (சிவம், மாலதி, அம்புஜம்)

மால (சன்னமாக அழுகிறாள்)

**சிவ:** இப்படி அழுதுக்கிட்டே இருக்காதேம்மா மாலதி. 'நடந்ததை மற'ன்னு சொல்ல மாட்டேன். ஆனா அதையே நெனச்சுக்கிட்டிருந்தா.. ஆகிற காரியத்தைப் பாக்க வேணாமா? நீ எப்பவும் கலக்கமா இருந்தா.. அதுவும் இந்த சமயத்திலே! தாயோட உணர்ச்சிங்கதானே கருவையும் பாதிக்குது!

**மால(அலுத்து):** சரிப்பா. சரி.சரி.

சிவ ஒருத்தர் போயிட்டதால, சூரியன் உதிக்காமலா இருந்துடறான்? நீ இப்படி அழுமூஞ்சி மாதிரி ஒரே இடத்தில ஒக்காராம, பழையபடி, நல்லா டிரெஸ் பண்ணிக்கயேன். மனசுக்கு உற்சாகமா இருக்கும்.

**மால (வருந்தி):** ம்! யாருக்காக இப்ப அலங்காரம்?

(இசை)

**அம்:** ஏண்டி, மாலதி! இது ஒனக்கே சரின்னு படுதா?

**மால:** என்னம்மா சொல்றீங்க? நானே நொந்து போய் கெடக்கேன்!

**அம்:** அதான் நானும் சொல்றேன். ஒங்க வீட்டுக்காரரு செத்துப்போய் இன்னும் மூணு மாசம்கூட ஆகல. அதுக்குள்ளே இப்படி மினுக்கிக்கிட்டிருந்தா நல்லாவா இருக்கு? கை நிறைய வளையலுங்க, சிவப்புப் புடவை! பூ ஒண்ணுதான் பாக்கி!

**மால(தயங்கி):**அப்பாதான் சொன்னார், பழசையே நெனச்சுக்கிட்டிருக்காதேன்னு..

**அம்:** அவரு சொன்னா, ஒனக்கு எங்கடி போச்சு புத்தி?

மால (விம்மல்)

அம்(தனக்குள்):** இப்ப நான் என்ன சொல்லிட்டேன், இப்படி அழுதுக்கிட்டு ஓடறா இவ! முந்தி இப்படி சிங்காரிச்சுக்கிட்டுத்தானே இப்ப சீரழிஞ்சுபோய் நிக்கறா! வயசுதான் ஆகுதே தவிர, இன்னும் புத்தி வரலியே!

# காட்சி - 5 (மாலதி, சிவம், அம்புஜம்)

**மால:** அப்பா!

**சிவ:** என்னம்மா?

(குழந்தை அழுகிறது)

**சிவ:** குழந்தை அழுவுது, பாரு. பசி வேளையா?

**மால(கவனியாது):** வந்துப்பா.., இப்படியே எத்தனை காலம் நான் இருக்க முடியும்? என்னோட பாட்டைப் பாத்துக்கவாவது ஏதாவது வேலைக்குப் போக வேணாம்?

**சிவ:** வீட்டில கைப்பிள்ளையை விட்டுட்டு, அப்படியாவது நீ வேலைக்குப் போகணுமா, மாலதி?

**மால:** எனக்கு இந்தப் பிள்ளையே வேண்டாம்பா. பிரசவ சமயத்திலேயே செத்துப் பிழைச்சேன்..

**சிவ(அதிர்ந்து):** மாலதி!

**மால:** ஒருவேளை, அது ஆம்பளைப் பிள்ளையா இருந்து, அதுவும்.. அவங்கப்பா சாயலா இருந்தா, பிடிச்சிருக்குமோ, என்னமோ!

**சிவ:** யமுனாவுக்கு என்னம்மா குறைச்சல்? நம்ப மலேசிய நாட்டில சாப்பாட்டுக்கு வழி இல்லியா, இல்ல வரதட்சணைக் கொடுமை நடக்குதா? ஆணா இருந்தா என்ன, இல்ல பொண்ணா இருந்தாத்தான் என்ன?

**மால:** குறை யமுனாகிட்ட இல்லப்பா. (மெதுவாக) அம்மா மாதிரியே நானும் அதை ஓயாம வதைப்பேனோன்னு பயமா இருக்குப்பா.

**சிவ:** மாலு?

**மால(அழுகைக் குரலில்):** யமுனா அசந்து தூங்கிக்கிட்டு இருக்கறப்போ, அவ கண்ணில ஊசியால குத்தணும்னு ஒரு வெறி வருதுப்பா.

**சிவ:** ஐயையோ!

**மால:** பிள்ளைபெத்த புதுசில, அபூர்வமா சில பேருக்கு இப்படித்தான் ஏதாவது கோளாறு வருமாம். இதை போஸ்ட் நேடல் டிப்ரெஷன் அப்படிங்கறாங்க. அதாம்ப்பா..! நான் யமுனாவை யாருக்காவது குடுத்துடப்போறேன். அவளைப் பாத்தாலே அவரோட நினைவுதான் வருது எனக்கு. ஆத்திரமா வருது. பிறக்கறதுக்கு முந்தியே அப்பனை விழுங்கிட்டா, துக்கிரி!

**சிவ:** எல்லாத்துக்கும் அவசரம்தானா ஒனக்கு? பிள்ளையைக் குடுத்தா குடுத்ததுதான், மாலதி. இது கடனில்ல, திரும்ப கேக்கறதுக்கு.

**மால:** இல்லப்பா. ஒரு குழந்தைக்கு அப்பா, அம்மா ரெண்டு பேரும் இருக்கணும்.

**சிவ:** சரி. சரி. அசட்டுப் பிசட்டுன்னு பேசிக்கிட்டு நிக்காதே. வளையல், ஒட்டற பொட்டு – இந்தமாதிரி சாமானுங்க விக்கற கடைக்காரர் ஒருத்தரை எனக்குத் தெரியும். கடையை பெரிசு பண்ணப் போறதா சொல்லிக்கிட்டு இருந்தார். அவர்கிட்ட ஒனக்கு வேலை கேட்டுப் பாக்கறேன். வீட்டிலேயே அடைஞ்சு கிடந்தா, இப்படித்தான் ஏதாவது குருட்டு யோசனை பண்ணிக்கிட்டு இருக்கத் தோணும்.

(குழந்தை அழுகிறது)

**அம்(உள்ளிருந்து, உரத்த குரலில்) :** ஏ மாலதி! பிள்ளை வெறச்சுப்போறமாதிரி அழுதுக்கிட்டிருக்கு! அதுகூடத் தெரியாம, அப்படி என்ன கொஞ்சிக் குலாவிக்கிட்டிருக்கீங்க அப்பாவும், மகளும்?

# காட்சி - 6 (அம்புஜம், மாலதி)

**அம்:** மாலதி! இப்படியேவா வெளியே போகப்போறே?

**மால:** ஏம்மா? இதுக்கென்ன? பஸ்ஸிலே ஏறி, இறங்க சௌகரியமா இருக்கு.

**அம்:** நாங்க எல்லாம் எந்த வேளையும் சேலைதான் கட்டிக்கிட்டோம். அதனால ஒண்ணும் அசௌகரியமா இருக்கல. இப்படி ஆம்பளை மாதிரி பைஜாமா போட்டுக்கிட்டுத் திரியல.

**மால(சிரித்து):** நல்ல அம்மா! நீங்க எந்தக் காலத்திலம்மா இருக்கீங்க? “சிவகாசி” படத்தில விஜய் தப்புத் தப்பாச் சொல்றமாதிரி.. இது பைஜாமா இல்ல. சூடிதார். (கொஞ்சலாக) அம்மா..! இப்ப எல்லாரும் இப்படித்தான் உடுத்திக்கிறாங்க.

**அம்:** மத்தவங்களைப்பத்தி நமக்கென்ன? அதுவும் நீ இன்னும் சின்னப்பொண்ணு இல்ல. இருபத்தஞ்சு வயசாகிடுச்சு. தனிமரமா வேறப் போயிட்டியா! அதான் கவலை எனக்கு.

(தனக்குள்) சொல்லிக்கிட்டே இருக்கேன், காதில விழாதமாதிரி வெளியே போறா பாரு! எல்லாம் சம்பாதிக்கற திமிரு! இவளுக்கு அந்த மனுசன்வேற சப்போர்டு!

# காட்சி - 7 (மாலதி, வனமாலா)

**வன:** ஹை மாலதி! இந்த சூடிதாரில நீ அப்சரஸ் மாதிரி இருக்கே! எங்க வாங்கினது இது?

**மால(சூள் கொட்டி):** இதுக்காக நான் இன்னிக்கு எங்கம்மாகிட்ட வாங்கின பாட்டு இருக்கே! அப்பப்பா!

**வன:** எதுக்காகத் திட்டணும்? என்னை மாதிரி.. பூதம் மாதிரி இருந்தா, எது போட்டாலும் பயங்கரமா இருக்கும். ஒனக்கென்ன, ராணிபோல இருக்கே!

**மால:** அங்கதான் குழப்பமே. யாராவது ராஜகுமாரன் வந்து என்னைக் கொத்திட்டுப் போயிடப்போறான்னு எங்கம்மாவுக்குப் பயம்.

**வன:** அப்படி நடந்தா, நல்லதுதானே? ஒனக்கோ முப்பது வயசுகூட ஆகல. புருஷன் போயிட்டா, அவரோட ஒன் வாழ்க்கையும் அஸ்தமிச்சுப் போயிடணுமா, என்ன?

**மால:** இவ்வளவு பேசற நீங்க ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலன்னு நான் கேக்கலாமா?

**வன:** அதுவா? 'இந்த குண்டுப் பொண்ணுக்கு என்ன கோளாறோ! அதான் கல்யாணம் ஆகலே'ன்னு ஒதுங்கிப்போயிட்டாங்க மத்தவங்க. அது அவங்க நஷ்டம்!

**மால:** விளையாடாதீங்க வனமாலா.

**வன:** ஒங்கிட்ட சொல்றதுக்கு என்ன, மாலதி? எங்கப்பா ஒரு காலி. அவர்கிட்ட எங்கம்மா பட்ட பாட்டைப் பாத்துட்டு, எனக்கு கல்யாணத்துமேலேயே நம்பிக்கை போயிடுச்சு. நான்தான் குடும்பத்துக்கு மூத்தவ. நான் யோசிச்சுக்கிட்டு இருந்தப்போவே என் தம்பி, தங்கச்சிங்க

எல்லாரும் அவங்கவங்க துணையத் தேடிக்கிட்டாங்க. அவங்களை எல்லாம் படிச்சு ஆளாக்கறதிலேயே என்னோட இளமை கரைஞ்சு போயிடுச்சு. (வரண்ட சிரிப்பு)

**மால:** சிரிச்சு மழுப்பாதீங்க, வனமாலா. இப்படி.. தனியா இருக்கறது வருத்தமா இல்லியா?

**வன:** இதில வருத்தமென்ன? என் தங்கச்சி பிள்ளைங்களை அப்பப்போ பாக்கப் போவேன், விளையாட்டுச் சாமானோ, பிஸ்கட்டோ கையில எடுத்திட்டுப்போய். அவங்க ஆசை ஆசையா மேல விழறப்போ தோணும் – நமக்கும் ஒரு குழந்தை இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்னு.

# காட்சி - 8 (மாலதி, சம்பத்)

(தெருவில் வாகனங்கள் விரைந்து கொண்டிருக்கின்றன)

**மால (தனக்குள்):** வீடு! வீடு விட்டா கடையில வேலை. திரும்ப வீடு. சே! என்ன வாழ்க்கை இது! இந்த ஸ்லிப்பர் வேற எந்த நிமிஷம் அறுந்துடுமோன்னு பயமா இருக்கு. அந்த மால்ல (mall) மலிவு விற்பனையாமே? போனா, மனசுக்கும் நல்லா இருக்கும்.

(சிறிது பொறுத்து. திடீரென்று பெரிய வாகனம் ஒன்று யாரையோ இடிக்கும் சப்தம். கார் க்ரீச்சிட்டு நிறுத்தும் ஒலி, நிறைய பேர் கசமுசா என்ற பேசும் சப்தம்.)

**சம் (தனக்குள்):** அடப்பாவி! இப்படி ரத்தக்களரியா கிடக்கற பொம்பளை பக்கத்தில கிடக்கிற ஹாண்ட்பேகை எடுத்துக்கிட்டு ஓடறானே! நல்ல ஊரு, இது! தெருவை கிராஸ் செய்துக்கிட்டிருந்தவங்கமேல காடியை ஏத்திட்டு, நிக்காம போறான் ஒருத்தன்! திருடன் கையில இருக்கிற கத்தியைப் பாத்து, அசையாம நிக்கறாங்க மத்தவங்க! (உரக்க) தள்ளுங்க. நான் இவங்களை ஹாஸ்பிடலுக்கு கூட்டிக்கிட்டுப் போறேன்.

# காட்சி - 9 (மாலதி, சம்பத்)

**மால (ஈனஸ்வரத்தில்):** அம்மா! அப்பா!

**சம்:** அப்பாடி! முழிச்சுக்கிட்டீங்களா! எழுந்திருக்காதீங்க. அப்படியே படுத்துக்குங்க.

**மால:** நீங்க யாரு? எனக்கு என்ன ஆயிடுச்சு?

**சம்:** நான் சம்பத். நீங்க ஒரு விபத்தில மாட்டிக்கிட்டீங்க. கார் மோதி, தலையில சரியான அடி. நினைவுமில்ல. நான்தான் ஒங்களைத் தூக்கிட்டு வந்து இந்த ஆஸ்பத்திரியில சேர்த்தேன். ஒரு வாரமாச்சு. சுயநினைவு இல்லாம, கோமாவில கிடந்தீங்க.

**மால:** எங்க அம்மா, அப்பா?

**சம்:**அந்தக் கண்ராவியை ஏன் கேக்கறீங்க? எவனோ பொறுக்கிப்பயல் ஒங்க ஹாண்ட்பேகைத் தூக்கிட்டு ஓடிட்டான். அதனால என்னால நீங்க யாருன்னு கண்டுபிடிக்க முடியல. எனக்கென்னமோ ஒங்களை இந்த நிலையில தனியா விட்டுட்டுப் போக மனசு வரல. நீங்க வேற தங்கச் சங்கிலி, வளை எல்லாம் போட்டிருந்தீங்களா! யாராவது அதை உருவிக்கிட்டுப் போயிட்டா என்ன செய்யறது? அதனால..

**மால:** நீங்களே உருவிக்கிட்டீங்களாக்கும்!

**சம் (சிரித்து):** அப்பாடி! நீங்க கண்ணு முழிப்பீங்களான்னு ஆயிடுச்சு எனக்கு. ஒங்க பேரு?

**மால:** மாலதி.

**சம்:** நான் சம்பத்.

**மால:** சொல்லிட்டீங்க.

**சம்:** சரி. ஒங்க விலாசம் என்ன சொல்லுங்க. இல்ல, போன் நம்பர். ஏதோ ஒண்ணு. ஒங்க வீட்டில இருக்கிறவங்க ஒங்களைக் காணாம எப்படித் துடிச்சுக்கிட்டு இருக்காங்களோ!

# காட்சி - 10 (அம்புஜம், சிவம்)

**அம் (தனக்குள்):** இந்த மாலதி எங்க தொலைஞ்சான்னே தெரியலியே! போதாத குறைக்கு அவளோட குழந்தை வேற, வரா வரான்னு கத்திட்டு இருக்கு! இந்த அவமானத்தை எங்க போய்ச் சொல்லி முட்டிக்கறது!

**சிவ:** என்ன அம்புஜம்? இன்னிக்கு யாருக்கு அர்ச்சனை நடந்துக்கிட்டிருக்கு?

**அம் (கோபமாக):** கேக்க மாட்டீங்க? ஒங்க அருமை மக – 'வேலைக்குப் போறேன்'னு வெளியே போனவ – வீடு திரும்பி ஒரு வாரமாச்சு. எல்லாம் நீங்க குடுக்கற எடம்!

**சிவ(மெள்ள):** இந்த வீட்டில எங்க தப்பு நடந்தாலும், அது என்னமோ என்னோட குத்தமாத்தான் போயிடுது!

**அம்:** ஒங்ககிட்ட ஏதாவது சொல்லிட்டுப் போனாளா?

**சிவ:** ஒங்கிட்டேயே சொல்லல. என்கிட்டவா சொல்லி இருக்கப்போறா?

**அம்:** இல்ல, போன தடவை செய்தமாதிரி.. இப்ப வேற எவனையாவது இழுத்துக்கிட்டு..

**சிவ:** நிறுத்து அம்புஜம். பாலுவை நாம்பதான் மாலதிக்குக் கட்டி வெச்சோம் – அதுவும் அவ ரொம்ப ஆசைப்பட்டதால. யாரும், யாரையும் இழுத்துக்கிட்டு ஓடல.

**அம்:** நான் ஏதாவது சொன்னா, ஒடனே மகளுக்கு பரிஞ்சுக்கிட்டு வந்துடுங்க. அதான் இந்த வீட்டில ஒருத்தரும் என்னை மதிக்கிறதில்ல.

**சிவ:** இப்ப என்ன செய்யணுங்கறே?

**அம்:** அதைக்கூட நான்தான் சொல்லணுமா? மாலதி எங்க போயிருக்கான்னு தேடுங்க, போங்க.

**சிவ:** எங்க போய் தேடறது? அவளுக்கு சிநேகிதிங்கன்னு யாருமில்ல. வேலைக்கும் ரெண்டு நாளா வரலேன்னு சொல்றாங்க. இனிமே போலீஸ்தான்.

**அம்:** நல்லாயிருக்கு. இந்த அசிங்கத்தை நாலு பேருக்குத் தெரியறமாதிரி தம்பட்டம் வேற அடிக்கணுமா?

**சிவ:** தெரியுதில்ல? வாயை மூடிக்கிட்டு இரு.

# காட்சி - 11 (சிவம், சம்பத், அம்புஜம்)

**அம்:** சம்பத் தம்பி! நீங்க மட்டும் சமயத்தில காப்பாத்தி இருக்காட்டி.. ஐயோ! என் மகளே எனக்கு இல்லாம போயிருப்பா.

**சம்:** அதெல்லாம் ஒண்ணுமில்ல ஆன்ட்டி. நான் இல்லாட்டி, வேற யாராவது கண்டிப்பா உதவி இருப்பாங்க.

**அம்:** ஒங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல.

**சம்:** அதுக்கென்ன! வடை, பாயசத்தோட ஒரு விருந்து குடுங்க. நான் அதிகமா ஒண்ணும் கேக்கல. (சிரிப்பு)

**சிவ:** தாராளமா! ஒங்களுக்கில்லாத விருந்தா! இப்ப நீங்களும் எங்க குடும்பத்தில ஒருத்தர் ஆகிட்டீங்க.

# காட்சி - 12 (சம்பத், மாலதி)

**சம்:** வீட்டில யாராவது இருக்கீங்களா?

**மால (சிரித்தபடி):** வாங்க வாங்க. நான் மட்டும்தான் இருக்கேன். எல்லாரும் ஒரு கல்யாணத்துக்குப் போயிருக்காங்க.

**சம்:** நீங்க போகலியா? யாருக்கு கல்யாணம்?

**மால(மெள்ள, வருத்தமாக):** எங்க அத்தை மகனுக்கு.. சின்னப்பிள்ளையிலேருந்து நாங்க ரெண்டு பேரும் ஒண்ணா விளையாடினவங்க. எனக்கு ஆசைதான். ஆனா அம்மா கூடாதுன்னாட்டாங்க. சில சமயம் ஒங்களை நெனைக்கிறப்போ எனக்கு கோபம் வரும்.

**சம் (விளையாட்டாக):** ஐயோ! நான் என்ன மாலதி தப்பு பண்ணினேன்?

**மால:** இப்படி யாருக்கும் வேண்டாதவளா இருக்கிறதைவிட நான் செத்திருக்கலாம். ஆனா, நீங்க காப்பாத்தி தொலைச்சுட்டீங்க.

**சம்:** தப்பு என்னோடதுதான். யாரோ, எப்படியோ போனா என்னான்னு அப்படியே நடுத்தெருவில ஒங்களை விட்டுட்டு போயிருக்கணும். (சிரித்து) சரி. நான் செய்த குத்தத்துக்கு நானே பரிகாரம் தேடிக்கறேன்.

**மால:** பரிகாரமா?

**சம்:** அந்தக் காலத்தில எவளாவது ராஜகுமாரியை ஒருத்தன் காப்பாத்தினா, அவனையே மணமகனா ஏத்துப்பாளாம் அவ. சின்னப்பிள்ளையில படிச்சிருக்கேன்..

**மால(அதிர்ந்து):** ஆ!

**சம்:** மாலதி! நானே இதைப்பத்தி ஒங்ககிட்ட பேசணும்னு நெனச்சுக்கிட்டு இருந்தேன். ஒங்களை உயிர் பிழைக்க வெச்சதுக்குத் தண்டனையா நானே ஒங்க கழுத்தில..

**மால:** நிறுத்துங்க, சம்பத். நான் ஒரு விதவை. எனக்கு ஒரு குழந்தையும் இருக்கு.

**சம்:** இப்பல்லாம் விவாகரத்து ஆனவங்களோ, இல்ல புருஷனைப் பறி குடுத்தவங்களோ இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறது சர்வ சாதாரணம். ஆண், பெண் ரெண்டு பேருக்குமே ஒரு துணை வேணுமில்லியா? எத்தனை காலம் ஒங்க அப்பாவும், அம்மாவும் ஒங்ககூட இருக்கப்போறாங்க?

(மௌனம்)

**சம்:** நல்லா யோசிச்சுப் பாருங்க. நான் ஒங்களுக்கேத்த அழகன் இல்ல. இந்த முப்பத்து நாலு வயசிலேயே முன் தலையில வழுக்கை. சின்ன வயசில அம்மை போட்டதில, முகமெல்லாம் தழும்பு வேற. எல்லாம் சரியா இருந்தா, ஒங்ககிட்ட இப்படி பேசக்கூட முடியாது.

**மால:** நான் இதையெல்லாம் பெரிசா நினைக்கல, சம்பத். நீங்களே ஏன் ஒங்களை மட்டம் தட்டிக்கறீங்க? அது சரி. நீங்க ஏன் இன்னும் கல்யாணமே பண்ணிக்கலே?

**சம்:** ஒங்களுக்குக்காகத்தான் காத்திட்டு இருந்தேன்னு வைங்களேன்.

**மால:**என்னது?

**சம்(சிரித்து):** ரெண்டு எடத்தில பொண்ணு பாக்க போனேனா? அவங்களுக்கு என்னை பிடிக்கல. 'நம்ப ராசி பிரம்மச்சாரியாவே இருக்கிறதுதான்'னு காலம் தள்ளிட்டேன். இப்பதான்.. ஒங்களைப் பாத்து.. இந்த வேண்டாத சஞ்சலம்.

**மால:** என்னோட குழந்தை யமுனா?

**சம்:** சொன்னா தப்பா நெனைக்க மாட்டீங்களே?

**மால:** ஊகும்.

**சம்:** ஒங்க குழந்தை நம்பகூடவே இருந்தா, ’என் மனைவியை ஏற்கெனவே ஒருத்தன் சொந்தம் கொண்டாடி இருக்கான்’னு மனசு உறுத்திக்கிட்டே இருக்கும்.

மால (பெருமூச்சு)

**சம்:** அந்தமாதிரி பல ஆம்பளைங்க நடந்துக்கிட்டதைப் பாத்திருக்கேன், மாலதி. மொதல் கணவனுக்குப் பிறந்த பிள்ளையையும், கூடவே மனைவியையும் வார்த்தையாலேயே கொல்வாங்க. அடிச்சுக் கொல்றவங்களும் இருக்காங்க.

**மால:** நீங்க அப்படி இருப்பீங்கன்னு நான் நம்பல. யமுனாகிட்ட எவ்வளவு பாசமா இருக்கீங்க!

**சம்:** இப்ப யமுனா யாரோட குழந்தையோ! அதனால கொஞ்ச முடியுது. ஆனா.., ஒங்களுக்கும், இன்னொருத்தருக்கும் பிறந்த குழந்தை இதுன்னு.. அவளை என்னோட மகளா ஏத்துக்கற மனப்பக்குவம் எனக்கு இருக்கான்னு எனக்கு சந்தேகமா இருக்கு, மாலதி.

# காட்சி - 13 (மாலதி, வனமாலா)

**மால:**ஹை! வனமாலா! வாங்க. வாங்க. நான் ஒங்களை எதிர்பாக்கவே இல்ல.

**வன (கேலியாக):** எதிர்..பாக்கலியா? அப்போ.. இப்ப போயிட்டு, அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிட்டு வரட்டுமா? (சிரிப்பு)

**மால (சிரித்து):** உள்ளே வாங்க.

**வன:** காடியில அடிபட்டதா சொன்னாங்க. ஒன்னைப் பாத்து ஒரு மாசத்துக்கு மேல ஆச்சா! பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன் மாலதி.

**மால:** நீங்க ஏன் வந்தீங்கன்னு கேட்டேனா? நீங்க வந்தது ரொம்ப சந்தோஷமா இருக்கு. சம்பத் மட்டும் அன்னிக்குக் கடவுள் மாதிரி வந்து என்னைக் காப்பாத்தி இருக்காட்டி...

**வன:** யாரது, சம்பத்?

(இசை)

**வன:** ஒன்னோட பேபி ரொம்ப க்யூட், மாலதி! ஒன் சாயலாவே இருக்கு.

**மால (சிவாஜி கணேசன்மாதிரி குரலை கட்டையாக மாற்றி):** புளிய மரத்தில் பூசணிக்காயா காய்க்கும்?

**வன:** ஏய்! முந்தி பாத்ததுக்கு இப்ப ஒன்கிட்ட ஏதோ வித்தியாசம் தெரியுது.

**மால:** என்ன, வெளியில அதிகமா அலையறது இல்ல. காதில அடிபட்டிருக்கிறதால, பெரிய சத்தம் ஏதாவது கேட்டா, மண்டையை பிளக்குது.

**வன:** அதில்ல மாலதி. ஒன்னை இவ்வளவு கலகலப்பா நான் பாத்ததே இல்ல. கண்ணில ஒரு ஒளி, ஒரு சிரிப்பு – காதல் வசப்பட்ட பொண்ணுமாதிரி. ஓ, ஸாரி. சட்டுனு மனசில பட்டதை சொல்லிட்டேன், ஒன் நிலைமையை மறந்து. மனசில வெச்சுக்காதே..

**மால (மெள்ள):** நீங்க சொன்னதில உண்மை இல்லாம இல்ல, வனமாலா.

**வன:** அப்படிச் சொல்லு! யாரு, சம்பத்தானே?

(குழந்தை சிரிக்கிறது)

**வன:** பாரு, அவர் பேரைக் கேட்டதும், பேபிக்குக்கூட ஆனந்தம்.

**மால:** அவர்தான்னு எப்படி அவ்வளவு சரியா கண்டுபிடிச்சீங்க?

**வன:** அதான் நான் வந்த பத்து நிமிஷத்தில ஐம்பது தடவை அவர் பேரைச் சொல்லிட்டியே! எனக்கு அவ்வளவுகூட புரியாதா!

**மால (மெள்ள):** என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறதா.. சொன்னாரு.. நேத்துதான். பெரியவங்களும் ஒத்துக்கிட்டாங்க.

**வன:** இன்னும் என்ன யோசனை, மாலதி? ஒன் குழந்தைக்கு ஒரு அப்பா கிடைச்சமாதிரியும் இருக்கும். (கொஞ்சி) ஏண்டா செல்லம்? அப்பா வேணுமா?

**மால:** இப்ப பிரச்னையே இவளாலதான். குழந்தையைப் பாக்கிறபோதெல்லாம் நான் வேற ஒருத்தருக்கு சொந்தமா இருந்திருக்கேங்கிறது உறுத்தும்னாரு.

**வன:** அடப்பாவி!

**மால:** இப்ப இந்த துக்கிரி பிறக்கலேன்னு யார் அழுதாங்க!

**வன:** சே! பிள்ளையை அப்படியெல்லாம் கரிக்காதே! ஒனக்கு ஆனாலும் ரொம்பத்தான் சுயநலம், மாலதி!

# காட்சி - 14 (மாலதி, மங்களா)

**மங்:** அப்பாடி! திரும்ப வேலைக்கு வந்துட்டியா? பேச்சுத் துணைக்கு ஆளில்லாம திண்டாடிப் போயிட்டேன், மாலதி.

**மால (அலுப்புடன்):** அதான் சாமான் வாங்க யாராவது வந்து போய்க்கிட்டிருப்பாங்களே! அவங்ககிட்ட பேசறது!

**மங் (அதிர்ந்து):** மாலதி!

**மால:** ஸாரி. இன்னிக்கு எனக்கு என்ன ஆச்சுன்னு புரியல. காலையில எழுந்திரிச்சதிலிருந்து எல்லார்மேலயும் எரிஞ்சு விழுந்துக்கிட்டிருக்கேன், வனமாலா.

**மங் (மெள்ள):** தலை ரொம்ப வலிக்குதா?

**மால:** அதெல்லாமில்ல. மனசுதான் சரியா இல்ல.

**மங்:** சம்பத் விஷயமா?

**மால:**ம்! 'எனக்கு ஒரு பதிலைத் தா'ன்னு அவர் நச்சரிக்கிறார். யமுனாவைப்பத்தி யார்கிட்டவும் பேச முடியாத நிலை எனக்கு. நான் ரொம்ப யோசிச்சா, அவர் வேற பொண்ணைப் பாத்து கட்டிக்கலாம். அந்த பயம் வேற. நான் ரொம்ப வெட்கத்தை விட்டுப் பேசறேன்னு நினைக்கறீங்களா?

**வன:** இல்ல. எனக்குப் புரியுது.

(இசை)

**வன:** நான் நாள் பூராவும் ஒன்னோட பிரச்னையைப்பத்தித்தான் யோசிச்சுக்கிட்டிருந்தேன், மாலதி. ஒரு யோசனை சொல்வேன். கோவிச்சுக்க மாட்டியே?

**மால:** என்னது?

**வன:** ஒன் பேபியை எனக்குக் குடுத்துடேன்.

**மால(நம்ப முடியாது):** நெசமாவா கேக்கறீங்க?

**வன:** இதில விளையாட்டு என்ன? நேத்தே எனக்கு இந்த யோசனை வந்தது. முந்தியே ஒங்கிட்ட சொல்லி இருக்கேன், எனக்கு ஒரு பிள்ளை வேணும்னு. எனக்குக் கல்யாண ஆசையெல்லாம் இல்ல. அன்னிக்கு நான் ஒங்கவீட்டுக்கு வந்தபோதே பேபி எப்படி எங்கிட்ட ஒட்டிக்கிச்சு! அன்னிக்கு ராத்திரி பூராவும் அதை நினைச்சு நினைச்சு பூரிச்சுக்கிட்டிருந்தேன். அப்பப்போ அழுகையும் வந்தது, நமக்கு இதுக்கெல்லாம் கொடுப்பினை இல்லியேன்னு.

**மால:** வனமாலா! நீங்க சொல்றது ...

**வன:** கேளேன். எங்க சொந்தக்காரங்க பிள்ளை யாரையாவது எடுத்து வளர்க்கலாம். ஆனா அவங்க தொந்தரவு இருந்துக்கிட்டே இருக்கும். பிள்ளைமேல சொந்தம் கொண்டாடிக்கிட்டு வருவாங்க. அப்பப்போ பணம், காசு குடுத்து அவங்க வாயை அடைக்கணும். இதெல்லாம் பெரிய தொந்தரவு. என் கண்ணுக்குள்ளே வெச்சு காப்பாத்துவேன் பேபியை. ஆனா ஒண்ணு, மாலதி. அவ என்னோட குழந்தையாத்தான் வளரணும்.

**மால:** அதான் எனக்கும் வேணும். 'பெத்தவளே பாரமா நினைச்சுட்டா, பாத்தியா!'ன்னு ஒரு எண்ணம் அவ பிஞ்சு மனசில படியக்கூடாது.

**வன:** ஒனக்கு அந்தக் கவலையே வேண்டாம். நான் என்னோட உயிரா அவளைப் பாத்துப்பேன்.

# காட்சி - 15 (மாலதி, சம்பத், வனமாலா)

**சம்:** மாலதி!

**மால:** அடடே! நீங்களா? எங்க கடையில நீங்க உபயோகிக்கிறமாதிரி ஒரு பொருளும் இல்லியே!

**சம்:** ஏன், ஒங்களைப் பாக்க வரக்கூடாதா?

**மால (மெள்ள):** ஷ்..! பாஸ் (BOSS) இருக்காரு. எதுவா இருந்தாலும் வீட்டில போய் பேசிக்கலாமே!

**சம்:** ஸாரி. சும்மா தமாஷுக்கு சொன்னேன். எனக்கு வேண்டிய பொண்ணு ஒருத்தருக்கு சில சாமானுங்க வாங்க வந்தேன்.

**மால (ஏமாற்றமாக):** ஓ, அப்படியா? அதை மொதல்லேயே சொல்லி இருக்கலாமில்ல? வளையா, பௌடரா?

**சம்(யோசித்து):** அ... சரி. வளையே குடுங்க.

**மால:** அளவு?

**சம்:** அதெல்லாம் வேற இருக்கா? வந்து.. ஆங்! ஒங்க அளவுதான் இருக்கும்.

**மால:** சரியா இல்லாட்டி திரும்பக் கொண்டுவரச் சொல்லுங்க அவங்களை. மாத்திக் குடுக்கறோம். பிரச்னை இல்ல.

**சம்:** அதுக்கு அவசியம் இருக்காதுன்னு நினைக்கறேன். அதான் சொல்றேனே! ஒங்க அளவுதான்.

**மால:** என்னது?

**சம்:** ம்.. ஒண்ணுமில்ல.

**மால:** எந்த மாதிரி வளைன்னு சொல்லுங்க.

**சம்:** இந்த பொம்பளைங்க சமாசாரம் எல்லாம் கட்டைப் பிரம்மச்சாரியான நான் என்னங்க கண்டேன்! ஒங்களுக்குப் பிடிச்ச மாதிரி எதையோ எடுங்க.

**மால:** என்ன விலையில எதிர்பாக்கறீங்க? நாலு ரிங்கிட்டிலேயும் இருக்கு, நூறு ரிங்கிட்டிலேயும் இருக்கு.

**சம்:** நூறு ரிங்கிட்டுக்கு வளையா? அப்பாடி!

**மால(பெருமையாக):** இதைப் பாத்துட்டுப் பேசுங்க! கல் வெச்சு, வெள்ளியில தங்க முலாம் பூசினது.

**சம்:** வெறும் பூச்சுதானே? அப்ப.. கறுத்துடுமோ?

**மால:** நகப்பூச்சு போட்டா..

**சம்:** கியூடெக்ஸ்?

**மால:** ஆமா. அதை அழிக்கற மருந்து இருக்கில்ல? அதை பஞ்சிலேயோ, துணியிலேயோ நனைச்சு, வளையைத் துடைக்கணும். மொதல்லேயே இப்படிச் செய்தா, பளபளப்பு குறையாம இருக்கும்.

**சம்:** அடேயப்பா! சரியான ஆளாத்தான் போட்டிருக்காங்க ஒங்க கடையில. எவ்வளவு விஷயம் தெரிஞ்சு வெச்சிருக்கீங்க!

**மால:** அப்ப எந்தமாதிரி வளை எடுத்துக்கறீங்க? நூறு ரிங்கிட் வளை வேண்டாம். எட்டு, பத்துக்குக்கூட இருக்கு. இங்க வாங்க.

**சம்:** மலிவா வேண்டாம். ஆசைப்பட்டவங்களுக்கு குடுக்கிறது. ஒங்க அளவில எடுங்க.

**மால(உரக்க):** வனமாலா. இங்க கொஞ்சம் வாங்களேன்.

**சம்(தணிந்த குரலில், எரிச்சலாக):** இப்ப எதுக்கு யாரையோ கூப்பிடறீங்க?

**மால:** என்ன இருந்தாலும், நான் போட்டுட்டு குடுத்தா நல்லதில்ல. அம்மா என்ன சொல்வாங்கன்னு யோசிச்சேன். அப்படித் தோணிச்சு.

**சம்(கோபமாக):** நான்சென்ஸ்! நீங்க போட்டுக்கப் போறதுக்கு நீங்க அளவு பாக்கக்கூடாதா?

**மால(அதிர்ந்து):** சம்பத்! என்ன சொல்றீங்க?

**சம்:** அன்னிக்கு வந்து ஒங்ககூட அவ்வளவுதூரம் பேசிட்டுப் போனேனே! அதுக்கப்புறம் நீங்களே புரிஞ்சுப்பீங்கன்னு பாத்தேன். சும்மா ஒங்களை வம்புக்கிழுத்துப் பாத்தா.., நீங்க பாட்டில வளவளன்னு, வளையல் புகழ் பாடறீங்க.

**மால(கோபமாக):** ஒங்களுக்கு வளை வேணுமா, வேண்டாமா?

**சம்:** இதோ, இந்த சிவப்புக்கல் பதிச்சதை எடுத்து, பையில போட்டுக் குடுங்க. அதுக்குப் பணம் குடுத்திட்டு, ஒங்க கையிலேயே குடுத்திட்டுப் போயிடறேன்.

**மால:** புரிஞ்சுதான் பேசறீங்களா? நான் எப்படி அதைப் போட்டுக்கறது?

**சம்:** அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. அவங்க சம்மதத்தை வாங்கிட்டு நேரா இங்கதானே வரேன்!

**மால:** என்னது?

சம்(சிரிப்பு)

(இசை)

**வன:** யாரது, மாலதி? ரொம்ப நேரமா ஒன்னை தொணதொணத்துக்கிட்டு இருந்தாரே!

**சம்:** யாரோ வேண்டியவங்களுக்கு வளை வாங்க வந்தாராம், ஆனா, அளவு, விலை எதைப்பத்தியும் ஒண்ணும் தெரியாம.. அவருக்கு விளக்கறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சு.

**வன:** நான் நெனைக்கறேன், சும்மா அழகான, இளம்பொண்ணுங்களோட பேசறதுக்கு இது ஒரு சாக்கு சிலபேருக்கு. நானும் பாத்துக்கிட்டேதானே இருந்தேன்! நேரா ஒங்கிட்ட இல்ல வந்தாரு! நீ தவிப்பா தவிச்சது நல்லாவே தெரிஞ்சிச்சு.

**மால:** வனமாலா!

**வன:** இன்னும் கொஞ்ச நேரம் அவர் இங்கிருந்திருந்தா, நானே வந்து மிரட்டி இருப்பேன்.

**மால(சிரித்து):** நல்லவேளை, சம்பத் தப்பிச்சார்.

**வன:** அப்படிச் சொல்லு. என்னடா, இந்த ஆளு இந்த அறு அறுக்கிறார், ஆனா அம்மா சிரிச்ச முகத்தோட பேசிக்கிட்டு நிக்கறாங்களேன்னு அப்பவே நினைச்சேன்.

**மால:** இதைப் பாத்தியா, வனமாலா?

**வன:** அட! ஒன்னோட ஆளை நான் என்னமோன்னு நினைச்சேன். நம்ப கடைச் சரக்கை வாங்கற சாக்கில வந்து, ஒன்னைப் பாத்துப் பேசிட்டு, வாங்கிய சாமானை ஒனக்கே பரிசா கொடுத்திட்டுப் போயிருக்காரே! எத்தனை பேருக்கு வரும் இந்த சாமர்த்தியம்!

**மால:** அது புரியாம, நான் அவரை விரட்டி அடிக்கப் பாத்தது இருக்கே! (சிரிப்புடன்) நல்ல வேடிக்கை!

**வன:** அப்ப ஒங்க கல்யாணம் நிச்சயமே ஆயிடுச்சுன்னு சொல்லு. ஒங்கம்மா ..

**மால (அலட்சியமாக):** அம்மாவும் சரின்னுட்டாங்களாம். இங்க வர்றதுக்கு முந்தி அம்மாவைப் பாத்துப் பேசிட்டுத்தான் வந்தாராம். சொன்னார்.

**வன:** மாலதி!

(மௌனம்)

**வன(உரக்க):** மாலதி! எங்க போயிட்டே, நீ! இதைச் சொல்றப்போ ஒன் முகத்தில மகிழ்ச்சியே இல்லியே! ஒனக்கு இந்த கல்யாணத்தில

விருப்பமில்ல? சம்பத்தைப் பிடிச்ச மாதிரி இல்ல தோணிச்சு!

**மால:** அவரைப் பிடிச்சிருக்கு, வனமாலா. அதோட, இவரைவிட்டா, வேற யாரு என்னை தேடிக்கிட்டு வரப்போறாங்க! பொண்ணுங்களுக்கு ஒரு தடவை கல்யாணமாகிறதே என்பாடு, ஒன் பாடுன்னு ஆகிடுது. நானோ வாழ்ந்துகெட்டவ. என்னோட யோசனை எல்லாம் என் குழந்தையைப்பத்திதான்.

**வன:** என்னது?

**மால:** அவளை எங்கூடவே வெச்சுக்கக்கூடாதுன்னு ஆரம்பத்திலேயே அவர்தான் சொல்லிட்டாரே!

**வன:** நாம்ப இதைப்பத்தி அன்னிக்கே பேசி முடிச்சுட்டோம்னு நினைச்சேன்.

**மால (கெஞ்சலாக):** ஒங்ககூட இவ்வளவு நாளாப் பழகறேனில்ல? எனக்கு ஒங்கமேல நம்பிக்கை இருக்கு. யமுனாவை நீங்க வளர்ப்பீங்களா, வனமாலா?

**வன:** கரும்பு தின்ன கூலியா! நீ இன்னிக்கே குடுத்தாலும் சரி. சந்தோஷமா வாங்கிக்கறேன்.

**மால:** அப்ப சரி. அம்மாகிட்ட ஏதாவது சொல்லிட்டு, குழந்தையோட வரேன். எங்கேயும் போயிடாதீங்க.

# காட்சி - 16 ( அம்புஜம், மாலதி)

**அம்:** ஐயையோ! ரூமில தூங்கிக்கிட்டிருந்த பிள்ளையைக் காணுமே! கதவை உள்ளே பூட்டிட்டுத்தானே படுத்தேன்! கட்டிலுக்கு அடியில உருண்டு போயிடுச்சோ? காணுமே! யாரு வந்து அதை தூக்கிட்டுப் போயிட்டுப் போயிருக்கப் போறாங்க!

**மால:** என்னம்மா? என்ன ஆச்சு? ஏன் இப்படி படபடப்பா தானே பேசிட்டு இருக்கீங்க?

**அம்:** அப்பாடா! வந்துட்டியா, மாலதி? யமுனாவை தூங்க வெச்சுட்டு, நான் பத்திரிகையை புரட்டுக்கிட்டு இருந்தேனா? கண் அசந்துபோய், அப்படியே தூங்கிட்டேன். முழிச்சுக்கிட்டுப் பாக்கறேன் – குழந்தையைக் காணும்.

**மால(தனக்குள்):** நான் வந்து போனதுகூட தெரியாம, குறட்டை விட்டுத் தூங்கிட்டு இருந்தீங்க! சும்மா 'கண் அசந்து'ன்னு அளக்கறீங்களா! (உரக்க) அவளுக்கு ஒண்ணும் ஆகல. நான்தான் தூக்கிட்டுப் போனேன்.

**அம்:** நீயா?

**மால:** நானேதான்.

**அம்:** நீ எப்ப வந்தே?

**மால:** நீங்க தூங்கிட்டிருந்தீங்கல்ல? அப்ப.

**அம்:** என்னை எழுப்பி, ஒரு வார்த்தை சொல்லி இருக்கக்கூடாது? அப்படி எங்க அவசரமா குழந்தையை தூக்கிட்டுப் போனே? ஒரு அஞ்சு நிமிஷம் மூச்சே அடைச்சுப் போச்சு எனக்கு.

**மால:** சம்பத் வந்திருந்தாராமே!

**அம்:** நான் என்ன கேக்கறேன், நீ என்ன பேசிக்கிட்டு இருக்கே!

**மால:** அதைத்தாம்மா சொல்ல வரேன். சம்பத் என்னைக் கட்டிக்கறதில எல்லாருக்கும் ஓகே. ஆனா, அவரோட கண்டிஷன் என்ன தெரியுமா? நான் மட்டும் – குழந்தை இல்லாம – அவர்கூட போகணுமாம். அன்னிக்கே சொல்லிட்டாரு.

**அம்:** எப்போ?

**மால:** நீங்க எல்லாரும் என்னை வீட்டில விட்டுட்டு, கல்யாணத்துக்குப் போயிருந்தீங்களே, அன்னிக்கு.

**அம்:** அடப்பாவி மனுசா! எங்கிட்டதான் மொதல்ல வந்து உத்தரவு கேக்கறமாதிரி இல்ல நடிச்சாரு!

**மால:** அவரோட நிபந்தனை சரியா, தப்பா?

**அம்:** சரியோ, தப்போ, நடக்கறதுதான். பெண்டாட்டி செத்தா, புது மாப்பிள்ளைம்பாங்க. பிள்ளைங்களை மாமியார் வீட்டுக்கு அனுப்பிட்டு, பெண்டாட்டியைப் பறிகுடுத்தவன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்குவான். சொந்தப் பிள்ளைங்களே வேண்டாம்னு தலை முழுகுகிறவங்களை எனக்குத் தெரியும். யமுனா யாருக்கோ பிறந்தது. எப்படி ஏத்துப்பாரு?

**மால:** நல்லவேளை, ஒங்களுக்குப் புரியுது.

**அம்:** கதை பேசிட்டு நிக்கற நேரத்தைப் பாரு! யமுனா எங்கே, மாலதி?

**மால:** நீங்க சொல்றபடிதாம்மா – எங்ககூட இருக்க வேணாம்னு வேற எடத்தில வளர ஏற்பாடு செய்துட்டேன்.

**அம்(பதறி):** பாவிப்பொண்ணே! என்னடி சொல்றே?

**மால:** எங்கூட வேலை செய்யறாங்களே, வனமாலா! ம்.. ஒங்களுக்குத் தெரியாது. அன்னிக்கு நம்ப வீட்டுக்கு வந்திருந்தாங்க.

**அம்:** அவளுக்கென்ன இப்ப?

**மால:**அவங்க ரொம்ப ஆசைப்பட்டதால யமுனாவை அவங்களுக்கே குடுத்துட்டேன்.

**அம்:** இப்படியும் யாராவது செய்வாங்களா! சுளையா பிள்ளையை தூக்கிக் குடுத்துட்டு வந்து நிக்கறியே! போடி! போய் திரும்ப எடுத்திட்டு வா.

**மால:** எதுக்கும்மா? அவ ஆசையாப் பாத்துப்பா.

**அம்:** அவ புருஷன்கிட்ட என்ன சொல்வாளாம்?

**மால:** வனமாலா கல்யாணமே கட்டிக்கல. யமுனாவும் அவளைப் பாத்ததுமே ஒட்டிக்கிட்டா.

**அம்:** எங்களை ஒரு வார்த்தை கேக்கணும்னு ஒனக்குத் தோணலியா?

**மால:** இப்ப என்ன ஆயிடுச்சுன்னு இவ்வளவு வருத்தப்படறீங்க? ஒங்களுக்கோ வயசாகிடுச்சு..

**அம்:** அதைப்பத்தி ஒனக்கென்ன? ஆள் போட்டுக்கறேன், எதுவோ செய்யறேன். நம்ப வீட்டுப் பிள்ளையை எப்படி வளர்க்கிறதுன்னு எனக்குத் தெரியும். நீ போ, ஒடனே. அவ கேட்டாளாம், இவ தூக்கிக் குடுத்தாளாம்! நல்ல கூத்து!

**மால:** இப்ப எங்க போய் வனமாலாவைப் பிடிக்கறது? கடையைச் சாத்தி இருப்பாங்க. மணியைப் பாத்தீங்களா? ஒன்பது!

**அம்:** சரி. நாளைக்கு காலையில மொதல் வேலையா நாம்ப ரெண்டு பேரும் நீ வேலை செய்யற அந்த கடைக்குப் போறோம்.

**மால:** நீங்க எதுக்கும்மா? நான் மட்டும் போய் ..

**அம்:** பேசாதே! நீ செஞ்சுட்டு வந்திருக்கிற காரியத்துக்கு..!

ஊரில, ஒலகத்தில என்னென்னமோ நடக்குதே! இந்த கலிகாலத்தில வளர்ந்த பிள்ளைங்களையே கடத்திட்டுப் போறாங்க. திருட, பிச்சை எடுக்க, அதைவிட இன்னும் கேவலமானதுக்கு எல்லாம் பழக்கறாங்களாம். இது ஒண்ணும் தெரியாத பச்சைப்பிள்ளை! கடவுளே, கந்தப்பா! எங்க வீட்டுக் குழந்தைக்கு எதுவும் ஆகாம நீதாம்பா காப்பாத்தணும்.

**மால (கலக்கமாக, தனக்குள்):** அம்மா ஏதேதோ சொல்றாங்களே! நான் அவசரப்பட்டுட்டேனா? வனமாலா .. ஊகும். அவ அப்படிப்பட்டவ இல்ல.

# காட்சி - 17 (மாலதி, சம்பத்)

**மால(அழுகைக் குரலில்):** சம்பத்! வந்துட்டீங்களா!

**சம்:** ஆன்ட்டி எனக்கு ஃபோன் பண்ணினாங்க. ஒடனே ஓடி வரேன். என்ன மாலதி, இப்படி ஒரு காரியம் பண்ணிட்டே!

**மால:** நீங்கதானே..பிள்ளை நம்பகூட..?

**சம்:** அதை விடு. யமுனா திரும்பக் கிடைச்சுட்டா, இல்ல?

**மால:** இல்ல, சம்பத்.

**சம்(உரக்க):** என்ன?

**மால:** வனமாலா – அவகிட்டதான் குழந்தை, அதோட துணிமணி, பிறப்புரிமைச்சீட்டு எல்லாத்தையும் கொடுத்தேன் – அவ இன்னிக்கு வேலைக்கு வரலியாம்.

**சம்:** பிள்ளையை எங்கே விட்டுட்டுப் போறதுன்னு தெரியாம முழிக்கறாங்களோ, என்னமோ! அதனால என்ன! நான் வரேன். நாம்ப ரெண்டு பேரும் அவங்க வீட்டுக்கே நேராப் போய்..

**மால (அழுகையோடு):** நான் அங்க போயிட்டுத்தான் வரேன், சம்பத்.

**சம்:** என்ன ஆச்சு? சீக்கிரம் சொல்லேன்.

**மால:** கடையில அவங்க குடுத்திருந்த விலாசத்துக்கு போனேன். வீட்டை அவசரமா காலி பண்ணிட்டு போயிட்டாங்களாம்.

**சம்:** நிச்சயமாத் தெரியுமா?

**மால:** வீட்டோட சொந்தக்காரர் சொன்னார். மாடியிலதான் வனமாலா குடி இருந்தாங்களாம். 'முன்னறிவிப்பு இல்லாம, திடீருன்னு போயிட்டா எப்படி?' ன்னு வீட்டுச் சொந்தக்காரர் கத்தினப்போ, ஒரு மாச வாடகையைத் தூக்கிக் குடுத்தாங்களாம். வேலையை விட்டுட்டதா வேற சொன்னாங்களாம். எனக்கு இப்ப என்ன செய்யறதுன்னே தெரியல.

**சம்:** பெரிய மோசடியா இருக்கே! எங்க போனாங்கன்னும் யாருகிட்டவும் சொல்லி இருக்க மாட்டாங்களே!

**மால:** ஊகும்.

**சம்:** சரியான தில்லுமுல்லு பொம்பளை!

**மால:** என்னால அவங்களை அப்படி நெனச்சுப் பாக்க முடியல. சொந்தக்காரங்க யாருக்காவது உடம்பு சரியில்லேன்னு தகவல் வந்திருக்கும். அவசரமா புறப்பட்டு போயிருப்பாங்க.

**சம்:** ஒன்னாலேயே இதை நம்ப முடியுதா, மாலதி?

(மௌனம்)

**சம்:** போயிட்டு திரும்பி வர்றவங்களா இருந்தா, வீட்டை எதுக்காக காலி பண்ணிட்டுப் போகணும்? நாம்ப போலீசுக்கு போகலாம், வா.

**மால:** இப்ப வேலையை விட்டுட்டு நான் எப்படி வர முடியும்?

**சம்:** ஒங்க முதலாளிகிட்ட நான் சொல்லிக்கறேன், வா.

**மால:** போலீஸ் எல்லாம் வேண்டாம், சம்பத்.

**சம்:** வனமாலா திருடிட்டுப்போன குழந்தையை பின்னே எப்படி மீட்கிறது?

**மால:** வனமாலா எங்க வீட்டுக்குள்ளே புகுந்து திருடிக்கிட்டுப் போகல. நானே விரும்பித்தான் குடுத்தேன். இப்ப எந்த முகத்தை வெச்சுக்கிட்டு புகார் குடுக்கறது?

**சம் (யோசித்து):** ம்.. பிரச்னைதான். எதுக்கும் கொஞ்சநாள் பொறுத்துப் பார்ப்போம்.

**மால (ஆத்திரமாக):** எல்லாம் ஒங்களாலதான்.

**சம் (கோபமாக):** நான் என்ன செஞ்சேன்?

**மால:** நான் மட்டும்தான் வேணும், குழந்தை நம்பகூட இருக்கக்கூடாதுன்னு நீங்கதானே சொன்னீங்க?

**சம்:** அதுக்காக இப்படி மூளை கெட்டுப்போய், யார்கிட்டயோ குழந்தையை தூக்கிக் குடுப்பேன்னு எனக்கு எப்படித் தெரியும்?

**மால:** என் குழந்தை! நான் என்னமோ பண்ணிக்கறேன். ஒங்க வழியைப் பாத்துக்கிட்டு போங்க. எல்லாம் ஒங்களாலதான். நீங்கமட்டும் என்னை மயக்கறமாதிரி பேசி இருக்காட்டி..

**சம் (தனக்குள்):** இது சரியான அரைப் பைத்தியம். என்னமா சண்டை பிடிக்கறா! காலமெல்லாம் யார் இவகூட திண்டாடறது? இவ்வளவு நாளா சுதந்திரமா இருந்துட்டு, இப்ப மூளை கெட்டுப்போய், கல்யாணம் பண்ணிக்க இருந்தேனே! நல்ல வேளை! இப்பவே இவ சுய ரூபம் புரிஞ்சிச்சு. .விஷயம் முத்தறதுக்குள்ளே நைசா கழண்டுக்க வேண்டியதுதான். கண்காணாம, வேற ஊருக்கு மாத்தல் வாங்கிட்டுப் போயிடணும்.

# காட்சி - 18 (வனமாலா, யமுனா)

(15 ஆண்டுகளுக்குப் பின்னர்)

**வன:** பேபி! என்னம்மா பண்ணிக்கிட்டு இருக்கே?

**யமு:** அம்மா! ஒங்களுக்கு எத்தனை வாட்டி சொல்றது, என்னை பேபின்னு கூப்பிடாதீங்கன்னு. என் ஃபிரெண்ட்ஸ்லாம் கேலி பண்றாங்கம்மா.

**வன:** ஸாரிடி, தங்கம். அப்படியே பழகிப்போச்சு.

**யமு:** பேர் விஷயத்திலே நம்ம வீட்டில என்னென்னமோ குழப்பம், இல்லம்மா?

வன(அதிர்ந்து) : என்னடி சொல்றே?

**யமு:** பின்னே என்னம்மா? என்னோட பிறப்புச்சீட்டில ஒங்க பேரு மாலதின்னு இருக்கு. நீங்க வனமாலான்னு சொல்லிக்கறீங்க.

**வன:** அதுவா? எனக்கு ரெண்டு பேரு. அப்பா வெச்ச பேரு மாலதி..

**யமு:** சரி. சரி. நாம்ப ஏம்மா இப்படி தனியாவே இருக்கோம்? நம்ப வீட்டுக்கு சொந்தக்காரங்க யாரும் வர்றது கிடையாது, நாம்பளும் இந்த வீட்டைவிட்டு எங்கேயும் போறதில்ல. கல்யாணம், சாவு – இப்படி எதுவுமே நமக்கு ஏம்மா இல்ல?

**வன(கடிந்து):** பதினஞ்சு வயசுப் பொண்ணா லட்சணமா இரு பேபி. கன்னாபின்னான்னு பேசாதே.

**யமு:** பாத்தீங்களா, மறுபடியும் பேபிங்கறீங்க!

**வன:** இனிமே சொல்லல. தப்பு! தப்பு!

**யமு:** அம்மா! சில சமயம் எனக்கு ஒரு சந்தேகம் வருது.. ஏம்மா? ரவிங்கிறவர் நிசம்மாவே என்னோட அப்பாதானா, இல்ல அதுவும் பொய்யா?

**வன:** என்ன கேள்விடி கேட்டுட்டே! நீ ரவிக்கும், மாலதிக்கும் முறையாப் பொறந்த பொண்ணுதான். எனக்கென்னமோ இங்க – கிழக்கு மலேசியாவில– இருக்கிறது பிடிச்சிருக்கு. அதான் ஒங்கப்பா கார் விபத்தில போனதும்.. ஒன்னைத் தூக்கிட்டு, தனியா வந்துட்டேன்.

**யமு:** ஒங்களுக்கு அம்மா, அப்பா இல்லியா?

**வன:** இருந்தாங்களே! அப்பா அருமையா இருப்பாரு. அம்மாவுக்கோ நான் நின்னா குத்தம், ஒக்காந்தா குத்தம். மாற்றாந்தாய்மாதிரி நடத்துவாங்க. அதுவும், ஒங்கப்பா போனதும் நான் அவங்ககிட்ட பட்ட பாடு இருக்கே..! அப்பப்பா! எந்த அலங்காரமும் பண்ணிக்கக் கூடாது, வெளியே வாசல்லே போகக்கூடாது.. இப்படி எத்தனையோ!

**யமு:** பாவம்மா நீங்க! அதான் இப்படி ஓடி வந்துட்டீங்களா?

**வன:** ஓடியெல்லாம் ஒண்ணும் வரல. பிளேனிலதான் வந்தோம் நாம்ப. நீ சும்மா வாயாடிக்கிட்டு நிக்காதே. ஹோம் ஒர்க் பண்ணி முடிச்சுட்டியா? பொழுது போகாட்டி, டான்ஸ் பிராக்டிஸ் பண்ணு. நாளைக்கு கிளாஸ் இருக்கில்ல?

# காட்சி - 19 (வனமாலா, யமுனா)

**வன(தனக்குள்):** மாலதி! ஒன்கிட்ட ஆறுதலா பேசறமாதிரி நடிச்சு, ஒன்னோட பேபியை பறிச்சுக்கிட்டு வந்துட்டேன். இப்ப இவளை அனாதையாக்கிட்டுப் போயிடுவேனோ! என்னை மன்னிச்சுடு, மாலதி.

**யமு:** அம்மா! என்னம்மா ஒரு மாதிரியா இருக்கீங்க?

**வன:** வந்துட்டியா யமுனா? இன்னிக்கு என்னால எந்த பலகாரமும் பண்ண முடியல. கடைக்குப் போய், ஏதாவது வாங்கிக்க. இந்தா காசு.

**யமு:** பசிக்கலம்மா. ஏம்மா, அன்னிக்கு வயத்து வலின்னு சொன்னீங்களே! இன்னும் சரியாப் போகல? நான் நாளைக்கு ஸ்கூலுக்கு லீவு போட்டுட்டு, ஒங்களைப் பாத்துக்கட்டுமா?

**வன:** என் ராசாத்தி! இவ்வளவு நல்ல மகளை அனுபவிக்க முடியாம போயிடுச்சே ஒங்கம்மாவுக்கு! எல்லாத்துக்கும் இந்தப் பாவிதான் காரணம்!

**யமு:** என்னம்மா, ஏதேதோ சொல்றீங்க! இருங்க, நான் போய் டாக்டரைக் கூட்டிட்டு வரேன்.

**வன:** இப்படி வா, பேபி. நான் என்ன பேசறோம்னு புரிஞ்சுதான் பேசறேன். நீ எப்பவும் என்னைக் கேட்டுட்டே இருப்பியே, அந்தக் கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய நேரம் வந்திடுச்சு.

**யமு:** அம்மா! வேண்டாம்மா. நான் இனிமே எதுவுமே கேக்க மாட்டேம்மா.

**வன:** பயப்படாதேம்மா. நான் சொல்லப்போறது.. ஒங்கம்மா பேரு மாலதி.

**யமு:** அதான் எனக்குத் தெரியுமே!

**வன:** ஆனா, அது நான் இல்ல.

**யமு:** ஆ! அப்ப.. நீங்க?

**வன:** ஒங்கம்மா மாலதியோட ஒண்ணா வேலை பாத்தவ இந்த வனமாலா.

**யமு:** நான் எத்தனை தடவை இதைப்பத்தி ஒங்களை கேட்டிருப்பேன்!

**வன:** ஒங்கப்பா செத்ததும், அம்மா இன்னொரு கல்யாணம் பண்ணிக்க இருந்தாங்க.

**யமு:** புரிஞ்சு போச்சு. நான் ஒருத்தி குறுக்கே இருந்ததால, என்னைத் தூக்கி விசிறிட்டாங்க. அப்படித்தானே?

**வன:** அப்படிச் சொல்லிட முடியாது. வர்றவரு ஒன்னை ஏத்துக்க மாட்டேன்னுட்டாரு. மாலதிக்கோ குழப்பம். நான்தான் ஆசைப்பட்டுக் கேட்டேன், ஒன்னை எனக்கே எனக்கு குடுத்துடச் சொல்லி.

**யமு(ஆத்திரமாக):** எல்லாருமா சேர்ந்து, என்னைப் பந்தாடி இருக்கீங்க!

**வன:** அப்படியெல்லாம் பேசாதேம்மா. மொதல் தடவை பாத்தபோதே நீ எங்கிட்ட ஒட்டிக்கிட்டே! நான் இப்படி குண்டா, அப்பா இல்லாத குடும்பத்தில மூத்த பொண்ணா பிறந்துட்டேன். தலைக்குமேல பொறுப்பு, கடன். முப்பத்தஞ்சு வயசாகிடுச்சு. எனக்குக் கல்யாணம் ஆகல, குடும்பம்னு சொல்லிக்கவும் யாருமில்ல. என்னமோடி, ஒன்னைப் பாத்ததுமே நீ என் குழந்தையா பிறந்திருக்க வேண்டியவன்னு..

**யமு(ஆத்திரமாக):** இந்தக் கதையெல்லாம் யாரு கேட்டாங்க? இப்ப அந்த மாலதி எங்க இருக்காங்க? எனக்குத் தலை முழுகிட்டு, நிம்மதியா ரெண்டாவது புருஷனோட இருக்காங்களா?

**வன:** ஒன் கோபம் எனக்குப் புரியுது, யமுனா. ஆனா, நீ நெனைக்கற மாதிரி நடக்கல. மாலதி மனசு மாறி, ஒடனே ஒன்னை திரும்ப எடுத்துக்கிட்டுப் போக வந்தா.

**யமு:** நீங்க குடுக்கலியாக்கும்!

**வன:** அவ அப்படி ஏதாவது பண்ணிடுவான்னு பயந்து.., யமுனா! நீ என்னை நம்பணும். ஒன்னைப் பிரிஞ்சு வாழறதை என்னால நெனச்சுக்கூட பாக்க

முடியல. வேலையை விட்டுட்டு, வீட்டையும் காலி பண்ணிட்டு, யார்கிட்டேயும் சொல்லிக்காம, ஊரை விட்டே வந்துட்டேன்.

**யமு:** அவங்க என்னைத் தேடிக்கிட்டு வந்ததா சொன்னீங்க?

**வன:** அது.. என் தம்பி வீட்டுக்குப் போனேனா! மாலதியை கட்டிக்கிறதா இருந்த சம்பத் என்னைப் பாத்துட்டாரு. ஏதோ காரணத்தால அவங்க கல்யாணம் நின்னு போயிடுச்சு. மாலதி ஒன்னைப் பறிகுடுத்துட்டு, ரொம்ப ஏங்கிப் போயிருக்கிறதா சொல்லிட்டு, என்னை மிரட்டினார். 'சாயந்திரம் வாங்க, குழந்தையைக் குடுத்துடறேன்'னு அவருக்கு பராக்கு காட்டிட்டு..

**யமு:** நீங்க என்னைப் பெத்த அம்மாவா இருக்க முடியாதுன்னு நான் சந்தேகப்பட்டது சரிதான். சாடையோ, குணமோ எதிலேயுமே நம்ப ரெண்டு பேருக்கும் ஒத்துமை இல்ல. எல்லாரையும் ஏமாத்திட்டு, இங்க வந்து ஒளிஞ்சுக்கிட்டீங்களாக்கும்!

**வன:** எல்லாம் ஒன்னை இழந்துடுவோமோங்கிற பயத்தாலதான் பேபி.

**யமு(கோபமாக):** பேசாதீங்க. நீங்க செஞ்சது அப்பட்டமான திருட்டு. இத்தனை வருஷமா என்கிட்ட பொய் சொல்லிச் சொல்லி..

**வன:** நீ வேற என்னை வார்த்தையால கொல்லாதேடி. அதுக்குத் தண்டனையாத்தான் கடவுளே எனக்கு புத்துநோயைக் குடுத்துட்டாரே!

**யமு:** இது என்ன புதுக் கதை?

**வன:** இதுக்கெல்லாம் யாராச்சும் பொய் சொல்வாங்களா? நிசமாத்தான் எனக்கு வயத்தில புத்துநோய். போன வாரம் வயத்து வலின்னு பரிசோதனை எல்லாம் பண்ணினாங்கல்ல? இன்னிக்குத்தான் தெரிஞ்சிச்சு.

**யமு:** இதைக் கேட்டு, எனக்கு ஏன் ஒங்கமேல இரக்கம் வரல?

**வன:** என்னைக் கொல்லாதேடி, யமுனா. ஒனக்கு நான் இப்ப என்ன செய்யணும், சொல்லு.

**யமு:** என்னைப் பறிகுடுத்துட்டு, நிர்க்கதியா நிக்கறதா சொன்னீங்களே, என்னைப் பெத்த அம்மா! அவங்களைப் போய்ப் பாக்கணும். அவங்க

கண்ணீரைத் துடைக்கணும். அது என்னால மட்டும்தான் முடியும்.

**வன:** நானே அதைத்தான் யோசிச்சுக்கிட்டிருந்தேன். நாம்ப இங்க வந்து பதினேழு வருஷம் ஆயிடுச்சு. இருந்தாலும், மாலதியோட விலாசம் இருக்கே! நாம்ப போய் விசாரிச்சுக்கலாம்.

**யமு(ஏளனமாக):** நீங்க ஒண்ணும் வரவேணாம். இதுவரைக்கும் நீங்க செஞ்சிருக்கிறதே போதும்.

(இசை – நிகழ் காலத்துக்கு வருவதைக் குறிக்க)

# காட்சி - 20 (தாமரை, யமுனா)

**தாம:** ஒங்கம்மா பேரு என்ன, மாலதியா? நீ தேடிப் போனபோது, முந்தி இருந்த விலாசத்தில இப்போ அவங்க யாருமில்ல. அடுத்து என்ன பண்ணறதுன்னு புரியாம நீ சுத்திக்கிட்டிருந்தப்போ..

**யமு(அழுகைக் குரலில்):** என்னைப் பாத்தா, கெட்ட பொண்ணு மாதிரியா தெரியுது? இங்க கொண்டு வந்து அடைச்சு..

**தாம:** வேற என்னம்மா பண்றது? நீயோ, ஒனக்கு யாரும் இல்லேன்னுட்டே! ஒன்னை மாதிரி ஒரு வயசுப்பொண்ணு தனியா ரோடில சுத்திக்கிட்டு இருந்தா, அதில எவ்வளவு ஆபத்துன்னு ஒனக்குப் புரியல. இங்கேயோ, ஆணோ, பெண்ணோ, யாரையும் உள்ளே விடமாட்டாங்க. நல்ல பாதுகாப்பு. தவிரவும், வேளாவேளைக்குச் சாப்பாடு, அவங்கவங்க மத சம்பந்தமான போதனை, பிரார்த்தனை, படிப்பு எல்லாம் இருக்கு.

**யமு:** இஷ்டப்படி வெளியே சுத்த முடியாது. அதை விட்டுட்டீங்களே! இங்க ஜெயில் மாதிரி இருக்கு.

**தாம:** இப்போ என்ன, பதினேழு வயசாகுதா? இன்னும் ஒரே வருஷம்! பதினெட்டு வயசு வரைக்கும்தானே இங்க ஒன்னை வெச்சிருப்பாங்க? அதுக்குள்ளே ஒங்கம்மாவைத் தேடிக் கண்டுபிடிக்கிறேன்.

**யமு(ஆவலுடன்):** ஒங்களால முடியுமா?

**தாம:** தினசரியில விளம்பரம் குடுத்துப் பாக்கலாம். எனக்கென்னமோ, அவங்களும் ஒனக்காக ஏங்கிக்கிட்டு இருப்பாங்கன்னுதான் தோணுது.

(இசை)

**தாம:** யமுனா! நான் ஒனக்கு நல்ல சேதி கொண்டு வந்திருக்கேன்.

**யமு:** ஹை! எங்கம்மா மாலதியைக் கண்டுபிடிச்சிட்டீங்களா?

**தாம:** கெட்டிக்காரப் பொண்ணு! சரியாச் சொல்லிட்டியே!

**யமு:** கண்டு பிடிச்சுட்டீங்களா? எங்கே? எப்போ? எப்போ என்னைப் பாக்க வரதாச் சொன்னாங்க? எனக்கு நினைவு தெரிஞ்சு, அவங்களை மொதமொதல்ல பாக்கப்போறேன். நல்லதா டிரெஸ் எதுவும் இல்லியே எங்கிட்ட!

**தாம(சிரித்து):** இரு. இரு. மூச்சு விட்டுக்க. நான் அவங்க எங்க இருக்காங்கன்னு கண்டுபிடிச்சுட்டேன்னுதான் சொன்னேன்.

**யமு (ஏமாற்றத்துடன்):** அப்போ.. அவங்களைப் பாக்கலியா?

**தாம:** அடுத்த வாரம் அன்னையர் தினம் வருதில்ல? அதுக்கு வரச் சொல்லி அழைப்பு அனுப்பிட்டு, அப்படியே போனிலேயும் கூப்பிட்டுச் சொல்றேன்.

**யமு:** நீங்க என்ன செய்வீங்களோ, எனக்கு எங்கம்மாவைப் பாத்தாகணும்.

**தாம(தனக்குள்):** பாவம்! (உரக்க) நான்தான் சொல்லிட்டேனில்ல? நீ எப்பவும்போல பிடிவாதம் பிடிக்காம, மத்தவங்களோட கலகலப்பா பேசிக்கிட்டு இரு. எல்லாரும் ஒன்னைப்போல, டீன் ஏஜ் பொண்ணுங்கதானே! ஒவ்வொருத்தருக்கும் ஏதேதோ பிரச்னை! அம்மா ஒழுங்கில்ல, பாட்டி அளவுக்கு அதிகமா கண்டிப்புன்னு ஒருத்தி வீட்டை விட்டு ஓடி வந்துட்டா. இன்னொருத்தியை பாய் பிரெண்ட் ஏமாத்தி விட்டுட்டுப் போயிட்டான்.

**யமு:** ரெண்டு பேர்.. அக்கா, தங்கச்சி மாதிரி இருக்காங்களே, அவங்க?

**தாம:** அதை ஏன் கேக்கறே? அப்பாதான் அவங்களோட வில்லன். செக்ஸ் வதையிலிருந்து எல்லாவிதக் கொடுமையையும் அனுபவிச்சிருக்காங்க, சின்ன வயசிலேருந்து. அம்மாவும் கண்டுக்கல. தாங்க முடியாம, ஓடி வந்து, தெருவில அலைஞ்சு, எப்படி எப்படியோ பிழைப்பை நடத்திப் பிழைச்சிக்கிட்டு இருந்தாங்க, மாசக்கணக்கில. அவங்களைக் குத்தம் சொல்றதுக்கில்ல. அவங்களுக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். ஒரு தடவை பிடிபட்டாங்களா! அப்ப பதினாறு, பதினேழு வயசுதான். இங்க கொண்டு விட்டாங்க. சின்னப் பொண்ணுங்களை ஜெயில்ல வெக்க முடியாதில்ல, அதான்!

**யமு:** ஓ, அதானா! போலீசுக்கு எப்படியெல்லாம் டிமிக்கி குடுத்தோம்னு அவங்க பேசி சிரிக்கறதைக் கேட்டு, பயமாப் போச்சு எனக்கு. ஏன் ஆன்ட்டி, இங்க சில பேருக்கு போதை மருந்து பழக்கம்கூட இருக்கும் போல இருக்கு?

**தாம:** சினிமாவைப் பாத்து கத்துக்கறது, சிகரெட் பிடிக்க. இல்ல, நண்பர்களோட கேலி பொறுக்காம. அப்புறம், 'ஒரே ஒரு தடவை.. எப்படித்தான் இருக்குன்னு பாப்போமே'ன்னு அந்த கர்மத்தைப் புகைக்கறாங்க. விடக்கூடிய பழக்கமா அது! கப்புனு பிடிச்சுக்குது. இங்க சாமிக்கு கொளுத்தற சூடத்தை எடுத்து வாயில போட்டுக்கறாங்க – அது எரிஞ்சுக்கிட்டிருக்கறபோதே.

**யமு:** ஐயோ! ஏன் ஆன்ட்டி?

**தாம:**அதுவும் போதையைக் குடுக்குதுங்கறாங்க!

**யமு:** ஐயோ! இவங்களோட பாத்தா, என் வாழ்க்கை எவ்வளவோ தேவல. இல்ல, ஆன்ட்டி?

**தாம:** ஒன்னை வளர்த்தவங்க.. பேரு என்ன சொன்னே?

**யமு(அவசரமாக):** வனமாலா. நான் அவங்களைத்தான் என் அம்மான்னு நெனச்சுக்கிட்டு இருந்தேன். அப்படி ஒரு பாசம் என்மேல. நான் எதை ஆசைப்பட்டுக் கேட்டாலும், ஒடனே வாங்கிக் குடுத்துடுவாங்க. சில சமயம், நான் கேக்காமலேயே, ஒரு சாமானை ஆசையோட பாக்கறதைக் கவனிச்சுட்டு, எனக்குத் தெரியாம போய் வாங்கிட்டு வந்துடுவாங்க. பாருங்க, இந்த கை கடிகாரம் அப்படி அவங்க வாங்கிக் குடுத்ததுதான். நல்லா இருக்கில்ல?

**தாம:** அந்தமாதிரி ஒரு அம்மா மனசு நோக, நீ இப்படி ஓடி வந்து மாட்டிக்கிட்டு இருக்கியே, யமுனா!

**யமு:** இங்க வர்றதுக்கு முந்தி எனக்கு அவங்கமேல கோபம் இருந்தது நிசம்தான். ஆனா, இப்பத்தான் தெரியுது எனக்கு – அவங்க என்ன செஞ்சிருந்தாலும், அது என்மேல வெச்சிருந்த அன்பாலதான்னு.

**தாம:** அப்ப .., அவங்ககிட்டேயே திரும்பி போயிடறேன்னு சொல்றியா?

**யமு:** அது எப்படி, ஆன்ட்டி? அவங்க என்னைப் பெத்தவங்க இல்லியே!

# காட்சி - 21 (மாலதி, சிவம்)

**மால:** அப்பா!

**சிவ:** வா, மாலதி வா. எங்க என் பேரப்பிள்ளைங்க? அட, கண்ணுங்களா! வாங்க, வாங்க. தாத்தாவைப் பாக்க வந்தீங்களா?

**மால:** ஒரு வாரம் ஒங்களைப் பாக்காம இருக்க முடியலப்பா இதுங்களுக்கு. எங்களோடயே வந்துடுங்கன்னா, நீங்க கேக்க மாட்டேங்கறீங்க.

**சிவ:** நான்தான் சொல்லிட்டேனே, மாலதி! அம்மா வாழ்ந்த இந்த வீட்டை விட்டுட்டு வர என்னால முடியாது. அதனால என்ன? உள்ளூரிலேயேதானே நீயும் இருக்கே!

**மால (குழந்தைகளிடம்):** ரெண்டு பேரும் தோட்டத்துக்குப் போய், பூ பறிச்சிட்டு வர்றீங்களா? மாலை கட்டி சாமிக்குப் போடலாம்.

**சிவ:** எதுக்கும்மா பிள்ளைங்களை விரட்டறே?

**மால:** இல்லப்பா. நாங்க இருக்கிறதோ ஃபிளாட்ல. ஓயாம டி.வி. பாக்கறதிலேயே நேரம் போயிடுது. தோட்டத்துக்கும், பூவுக்கும் எங்க போறது? அதான்! பொம்பளைப் பிள்ளைங்களுக்கு பூ கட்டி, வெச்சா அந்த ஆனந்தமே தனிதான்.

**சிவ:** ஒரு பிள்ளையை அநியாயமா பறி குடுத்தப்புறம்தான் ஒனக்கு பிள்ளைங்களோட அருமை தெரியணும்னு இருக்கு! எல்லாம் விதி!

**மால (பயத்துடன்):** அப்பா! மறந்தும் அந்தப் பேச்சை எடுக்காதீங்க.

**சிவ:** ஏன் மாலதி நாம்ப பேசாட்டி மட்டும், யமுனான்னு ஒரு பிள்ளை ஒனக்குப் பிறக்கல்லன்னு ஆகிடுமா?

**மால:** அப்பா! நான் அனாதை ஆசிரமத்தில வேலை பாத்துக்கிட்டு இருந்தப்போ, இவங்கப்பா ஏதோ தர்மம் செய்ய அங்க வந்தவரு, நான் விதவைன்னு தெரிஞ்சும், தயங்காம என்னை மறுமணம் செய்துக்கிட்டாரு. மொதல்ல நடந்தமாதிரி ஏதாவது ஆகிடப்போகுதேன்னு நான் எனக்கு ஒரு குழந்தை இருந்த சமாசாரத்தை அவர்கிட்ட சொல்லாம மறைச்சுட்டேனே! இப்ப போய்..

**சிவ:** சரி. சரி. பழசை எதுக்குக் கிளறணும்! யமுனா இப்ப இருக்கோ, போயிடுச்சோ!

மால (பதறி):** அப்பா! என் மூத்த பொண்ணு என் சிநேகிதியோட எங்கேயோ நல்லா இருக்காப்பா. வனமாலா கெட்டவ இல்ல. என் மகளை என்னைவிட நல்லா பாத்துப்பா. நான் அப்படித்தான் நம்பிக்கிட்டு இருக்கேன்.

**சிவ:** ம்! கையை விட்டுப் போனது போனதுதான். ஏதோ வேகத்தில அறியாம நீ செஞ்ச காரியம் அது. விடு, போ! அதுக்குப் பதிலாத்தான் மணிமணியா ரெண்டு பொண்ணுங்களை ஒனக்குக் குடுத்திருக்காரே, கடவுள்!

# காட்சி - 20 (தாமரை, மாலதி)

(டெலிபோன் மணி அடிக்கிறது)

**மால:** ஹலோ!

**தாம:** என் பேரு தாமரை. மாலதிங்கறவங்களோட பேசணும்.

**மால:** நான்தான் மாலதி பேசறேன்.

**தாம:** நான் ஒரு சமூக சேவகி. ஒங்க மக யமுனா சம்பந்தமா கொஞ்சம் ஒங்ககிட்ட பேசணும்.

**மால (மூச்சை உள்ளுக்கிழுத்து):** ஸாரி. ராங் நம்பர்.

**தாம:** இருங்க. போனை வெச்சுடாதீங்க. அந்தப் பொண்ணு ஒங்களைப் பாக்க எவ்வளவு ஏங்கிக்கிட்டு இருக்கா, தெரியுமா? நீங்க அவ பேரைக் கேட்டதுமே, ஆர்வமா என்னென்னமோ விசாரிப்பீங்கன்னுதான் எதிர்பாத்தேன். பரவாயில்ல. ஒங்களுக்கு என்ன அசௌகரியமோ!

**மால(மெள்ள):** என் விலாசத்தை எப்படிக் கண்டுபிடிச்சீங்க?

**தாம:** எவ்வளவோ கஷ்டப்பட்டேன்னு வைங்களேன். இப்ப அதுவா முக்கியம்? மாலதி! ஒங்களுக்காக இல்லாட்டியும், யமுனாவுக்காக நீங்க இங்க கண்டிப்பா வரணும்.

**மால:** தயவு செய்து என் நிலைமையைக் கொஞ்சம் புரிஞ்சுக்குங்க. எனக்கு இப்போ வேற ஒரு கல்யாணம் ஆகி, ரெண்டு பிள்ளைங்களும் இருக்காங்க.

**தாம(ஏமாற்றத்துடன்):** ஓ..! யோசிச்சுப் பாருங்க, மாலதி. யமுனாவும் ஒங்க குழந்தைதானே? நீங்க ஒரே ஒரு தடவை அவளைப் பாத்துப் பேசிட்டா

போதும். அவ கேக்கறதெல்லாம் அவ்வளவுதான். அவளை வளக்கிறவங்க கிட்ட அவளுக்கு ரொம்ப பாசம்.

**மால(தனக்குள்):** அப்பாடி! தாங்க்ஸ், வனமாலா. ஒங்கமேல நான் வெச்சிருந்த நம்பிக்கை பொய்யாகல.

**தாம:** என்ன மாலதி, பேச்சையே காணோம்? வர்றீங்கதானே?

**மால:** எங்கே வரணும்னு சொல்லலியே!

**தாம:**ஓ! ஸாரி. ஒங்களைக் கண்டுபிடிச்ச ஆனந்தத்தில.. ஏதோ பேசறேன். யமுனா இப்ப பதினெட்டு வயசுக்குள்ளே இருக்கிற பொண்ணுங்களுக்கான இல்லத்தில இருக்கா. அதோட விலாசம்..

**மால:** இருங்க. இல்லம்னு சொல்றீங்க! அனாதை இல்லமா?

**தாம:** இல்ல, மாலதி. வீட்டை விட்டு ஓடி வந்து, திசை தெரியாம நடக்கிற சின்னப் பொண்ணுங்களை வெச்சிருக்கிற எடம் அது.

**மால:** ஐயையோ! என் மக அப்படி என்ன தப்பு செய்தா?

**தாம:** பெரிசா ஒண்ணுமில்ல. ஒங்களைத் தேடிக்கிட்டு ஊரைச் சுத்திட்டு இருந்தா – ராத்திரி, பகலா. இப்ப ஒண்ணும் மோசமாகிடல. அவளுக்கு எங்க இல்லத்தில நல்ல பாதுகாப்பு இருக்கு. படிப்பு, தையல், சமையலுன்னு நிறைய விஷயங்க சொல்லிக் குடுத்து, எதிர்காலத்தில அவங்க கெட்டுப்போகாம இருக்க வழி பண்ணறோம்.

**மால(தனக்குள்):** நான்தான் கேடு கெட்டவ. பெத்த அம்மாவே வேணாம்னு ஒதுக்கிட்டா, அப்புறம் பிள்ளைங்க எப்படி நல்லா வளர முடியும்!

**தாம:** கேளுங்க, மாலதி. எல்லா இனத்து பொண்ணுங்களும் அங்க இருக்கிறதால, அவங்கவங்க மத வழக்கப்படி பிரார்த்தனை பண்ணவும் சொல்லிக் குடுக்கறாங்க. அது மட்டுமா? கண்டபடி கெட்டலைஞ்சு, அதனால மனநிலை அவ்வளவு சரியா இல்லாதவங்களுக்கு வைத்தியமும் குடுக்கறாங்க.

**மால:** ஐயோ! ஏதேதோ சொல்றீங்களே! என் யமுனா இப்ப எப்படி இருக்கா?

**தாம:** ஒங்க மக நல்லாத்தான் இருக்கா. நான் பொதுவாச் சொன்னேன். மத்தபடி, நீங்க கலவரப்படறமாதிரி அவளுக்கு ஒண்ணும் ஆகிடல.

**மால:** சரி. எப்போ, எங்கே வரணும்னு சொன்னீங்க? கொஞ்சம் இருங்க. பேப்பர், பேனா எடுத்துட்டு வரேன்.

# காட்சி - 22 (மாலதி)

(தனக்குள்) யமுனா! இத்தனை வருஷமா ஒன்னைப் பாப்போமான்னு நான் உருகிக்கிட்டு இருந்தது யாருக்குத் தெரியும்! இப்ப எங்கேயிருந்துடி முளைச்சிருக்கே! ஒண்ணா, ரெண்டா, பதினஞ்சு வருஷம்! பத்து வருஷம் காத்துக்கிட்டிருந்திட்டு, இனிமே ஒன்னைப் பாக்கவே முடியாதுன்னு நிச்சயம் பண்ணிக்கிட்டப்புறம்தானே நான் இன்னொருத்தருக்குக் கழுத்தை நீட்டினேன்! இப்ப ஒன்னை யாருன்னு அவர்கிட்ட அறிமுகப்படுத்துவேன்! 'பொய் சொல்லி, கல்யாணம் செய்துக்கிட்டே'னு அவர் என்னை ஒதுக்கி வெச்சுட்டா? ஒன்னோட தங்கச்சிங்களுக்கு அப்பா இல்லாம போயிடுமேடி!

(அழுகைக் குரலில்) யமுனா! நீ போனது போனபடி இருக்கட்டும். இப்போ இருக்கிற ரெணடு பொண்ணுங்களுக்காக நான் ஒன்னை ஏத்துக்க முடியாத நிலையில இருக்கேன். என்னை மன்னிச்சுடும்மா. நாம்ப பிரிஞ்சது பிரிஞ்சதாகவே இருக்கட்டும். நான் ஒனக்காக அழுதுக்கிட்டே இருக்கணும்னு என்னோட விதி!

# காட்சி - 23 (யமுனா, தாமரை)

**தாம:** யமுனா! இன்னும் ஏன் அங்கேயே ஒக்காந்துக்கிட்டிருக்கே? மணி ஒன்பதுக்குமேல ஆயிடுச்சே! கொண்டாட்டம் எல்லாம் முடிஞ்சு போச்சு. இனிமே யாரும் வரமாட்டாங்க. உள்ளே வா.

**யமு:** இந்த அம்மாவுக்கு என்னை நிசமாவே பிடிக்காம போய்த்தான் என்னை அவங்க ஃப்ரெண்ட் வனமாலாகிட்ட குடுத்துட்டாங்க. இல்ல, ஆன்ட்டி?

**தாம:** அதைப்பத்தி இப்ப பேசறதால, நாம்ப எதையாவது மாத்திட முடியுமா யமுனா? அவங்களுக்கு அப்போ என்ன இக்கட்டோ!

**யமு:** அன்னிக்கு அம்மாவோட பேசினதா நீங்க சொன்னதிலேருந்து, நான் எவ்வளவு ஆவலா அவங்களை எதிர்பாத்துக்கிட்டு இருந்தேன், தெரியுமா, ஆன்ட்டி? இப்படி ஏமாத்திட்டாங்களே!

**தாம:**யமுனா! நான் வேணுமானா, மாலதியை ஒரு தடவை நேரில பாத்து..

**யமு:** வேண்டாம், ஆன்ட்டி. ஒரு வேளை.. நான் வெற்றிகரமா, இல்ல புகழோட வாழ்ந்துக்கிட்டிருந்தா, அந்தம்மா என்னைப் பாக்க வந்திருப்பாங்களோ, என்னமோ! இந்த எடத்தில இருந்தா.., நான் சட்டபூர்வமா குத்தவாளிதானே? அதான் அவங்களுக்கு என்னைப் பிடிக்காம போயிடுச்சு. என்னால அவமானம்தான் அவங்களுக்கு, இல்ல? இதை மொதல்லேயே புரிஞ்சுக்காத முட்டாள் நான்.

# காட்சி - 24 (யமுனா, தாமரை)

யமு (மகிழ்ச்சியுடன், உரக்க):** ஆன்ட்டி! என் பரீட்சை ரிசல்ட் வந்திடுச்சு.

**தாம:** தெரியும்மா. ஒன்னைப் பாத்தா எனக்குப் பெருமையா இருக்கு, யமுனா. எவ்வளவோ குழப்பம் இருந்தும், பரீட்சையில எவ்வளவு நல்லா பாஸ் பண்ணி இருக்கே! இவ்வளவு மூளையை வெச்சுக்கிட்டு..! நல்லா வீட்டைவிட்டு ஓடி வந்தே!

**யமு:** அதுவும் ஒரு விதத்தில நல்லதுக்குத்தான், ஆன்ட்டி. இல்லாட்டி, ஆயுசு பூராவும் 'என்னைப் பெத்த அம்மாவுக்கு என்மேல என்ன வெறுப்போ, அவங்க எப்படி இருப்பாங்களோ!'ன்னு ஏதாவது வேண்டாத யோசனையில குழம்பிக்கிட்டே இருந்திருப்பேன். இப்ப என் மனசு தெளிவாகிடுச்சு.

**தாம:** ரொம்ப சந்தோஷமா இருக்கு, கேக்கறபோதே. மேல என்ன செய்யப்போறே, யமுனா?

**யமு:** அதை எங்கம்மாதான் சொல்லணும், ஆன்ட்டி.

**தாம:** யாரு, மாலதியா? அவங்க எப்போ வந்தாங்க ஒன்னைப் பாக்க?

**யமு:** 'அம்மா'ன்னு நான் சொன்னது வனமாலாம்மாவை.

**தாம:** அட!

**யமு:** ஆன்ட்டி. அவங்களுக்கு உண்மையில என்மேல எவ்வளவு பாசம்னு இப்பத்தான் எனக்குப் புரியுது. யாரோ பெத்த பிள்ளைதானேன்னு என்னை ஏனோதானோன்னு பாக்காம, படிப்பு மட்டுமில்லாம, தன்னால முடிஞ்சவரைக்கும் பாட்டு, டான்சுன்னு சொல்லி வெச்சு..

ஒங்ககிட்ட சொல்லி இருக்கேனா, ஆன்ட்டி? அம்மா ரெண்டு எடத்தில வேலை பாத்தாங்க. அவங்களுக்கு அவ்வளவு செலவு வெச்சேன்! அப்படிப்பட்ட

அம்மாவுக்கு என்னை எவ்வளவு தூரம் பிடிச்சிருந்ததுன்னு அப்போ எனக்குப் புரியல. என்மேல.. வெறும் அன்பில்ல, வெறித்தனமான அன்பு அவங்களுக்கு.

ஆனா.., ஏதோ சுயநலத்தால என்னை ’வேண்டாம்’னு ஒதுக்கிட்டுப் போறவங்களுக்கு இந்த வெறி எவ்வளவோ மேல். இல்ல, ஆன்ட்டி?

**தாம:** யமுனா!

**யமு:** நான் வனமாலாம்மா வீட்டுக்குப் போனதும், லெட்டர் போடுவேன். நீங்க கண்டிப்பா பதில் போடணும்.

**தாம:** நீ வரப்போவே அவங்களுக்கு என்னமோ ஒடம்புன்னு சொன்னியே, யமுனா?

**யமு:** அதெல்லாம் ஒண்ணுமிருக்காது, ஆன்ட்டி. எனக்கு எங்கம்மாவைத் தெரியும். நான் திரும்பி வரப்போற நாளை எதிர்பாத்துக்கிட்டு இருப்பாங்க. (சிரித்து) ‘என்ன பேபி? அம்மாவைப் பாத்தியா?’ ன்னு அவங்க கேப்பாங்க.

**தாம:** பேபியா?

**யமு(பெருமையாக):** எங்கம்மாவுக்கு நான் எப்பவுமே பேபிதான். கேளுங்க. ’அம்மாவைப் பாத்தியா?’ன்னு அவங்க கேப்பாங்களா?

**தாம:** அதான் ரெண்டு தடவை கேட்டுட்டியே! நீ என்ன சொல்வே அதுக்கு?

**யமு: (சிரிப்பு)** நான் சொல்வேன், ’இதோ, பாத்துக்கிட்டுதானேம்மா இருக்கேன்’னு! ம்.. ஆன்ட்டி! எனக்கு இப்ப ஒண்ணு புரிஞ்சுபோச்சு. பெத்தா மட்டும் ஒருத்தர் அம்மாவாகிட முடியாது. இல்ல?

**தாம:** பின்ன என்ன? நீயே சொல்லு.

**யமு:** அன்பைக் கொட்டி வளர்க்கணும். தான் கஷ்டப்பட்டாலும், தன் குழந்தை நல்லா வளரணும்னு நினைக்கணும் – வனமாலா அம்மாமாதிரி.

**தாம:** அடேயப்பா! ஒன் வயசுக்கு இவ்வளவு தத்துவம் பேசறியே!

முடிவு

# FREETAMILEBOOKS.COM

## மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. Kindle, Nook, Android Tablets போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000 ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

## ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை PDF, EPUB, MOBI, AZW3. போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

## தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. ProjectMadurai.com எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஒர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் PublicDomain-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

## சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?

அமேசான் கிண்டில் கருவியில் தமிழ் ஆதரவு தந்த பிறகு, தமிழ் மின்னூல்கள் அங்கே விற்பனைக்குக் கிடைக்கின்றன. ஆனால் அவற்றை நாம் பதிவிறக்க இயலாது. வேறு யாருக்கும் பகிர இயலாது.

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் Creative Commons எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

### தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை “யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்” என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது “Creative Commons” எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் “All Rights Reserved” எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் “All Rights Reserved” என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை “Creative Commons” உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி நாம் நமது

வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை  உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு  நமக்கு
அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச் செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை "மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்"-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

## FREETAMILEBOOKS.COM

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

PDF for desktop, PDF for 6" devices, EPUB, AZW3, ODT

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம்(download) செய்து கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம்(download) செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை

எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல் போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.

அவ்வளவுதான்!

**மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:**

1. ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை “Creative Commons” உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்
2. தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்
3. சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்

விருப்பமுள்ளவர்கள் freetamilebooksteam@gmail.com எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்?**

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாக பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், ebook reader ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.

**இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?**

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப் பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து ebook reader போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் tablets மற்றும் ebook readers போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

**நகல் எடுப்பதை அனுமதிக்கும் வலைதளங்கள் ஏதேனும் தமிழில் உள்ளதா?**

உள்ளது.

பின்வரும் தமிழில் உள்ள வலைதளங்கள் நகல் எடுப்பதினை அனுமதிக்கின்றன.

1. http://www.vinavu.com
2. http://www.badriseshadri.in
3. http://maattru.com
4. http://www.kaniyam.com
5. http://blog.ravidreams.net

**எவ்வாறு ஓர் எழுத்தாளரிடம் CREATIVE COMMONS உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?**

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

**துவக்கம்**

உங்களது வலைத்தளம் அருமை (வலைதளத்தின் பெயர்).

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக Mobiles மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள் http://www.FreeTamilEbooks.com எனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான Desktop,ebook readers like kindl, nook, mobiles, tablets with android, iOS போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் support செய்யும் odt, pdf, ebub, azw போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள் உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை  பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை “Creative Commons” உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

http://creativecommons.org/licenses/

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

e-mail : FREETAMILEBOOKSTEAM@GMAIL.COM
FB : https://www.facebook.com/FreeTamilEbooks

G plus: https://plus.google.com/communities/108817760492177970948

நன்றி.

**முடிவு**

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் “Creative Commons License”-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலைFREETAMILEBOOKSTEAM@GMAIL.COM எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது?**

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

**மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?**

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும். அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம். அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி-I பகுதி-II என்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

**தவிர்க்க வேண்டியவைகள் யாவை?**

இனம், பாலியல் மற்றும் வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?**

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- EMAIL : FREETAMILEBOOKSTEAM@GMAIL.COM
- Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks
- Google Plus: https://plus.google.com/communities/108817760492177970948

**இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?**

குழு – http://freetamilebooks.com/meet-the-team/

**SUPPORTED BY**

கணியம் அறக்கட்டளை http://kaniyam.com/foundation

# கணியம் அறக்கட்டளை

## தொலை நோக்கு – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழல்

## பணி இலக்கு – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

## தற்போதைய செயல்கள்

- கணியம் மின்னிதழ் – http://kaniyam.com
- கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இலவச தமிழ் மின்னூல்கள் – http://FreeTamilEbooks.com

**கட்டற்ற மென்பொருட்கள்**

- உரை ஒலி மாற்றி – Text to Speech
- எழுத்துணரி – Optical Character Recognition
- விக்கிமூலத்துக்கான எழுத்துணரி
- மின்னூல்கள் கிண்டில் கருவிக்கு அனுப்புதல் – Send2Kindle
- விக்கிப்பீடியாவிற்கான சிறு கருவிகள்
- மின்னூல்கள் உருவாக்கும் கருவி
- உரை ஒலி மாற்றி – இணைய செயலி
- சங்க இலக்கியம் – ஆன்டிராய்டு செயலி
- FreeTamilEbooks – ஆன்டிராய்டு செயலி
- FreeTamilEbooks – ஐஓஎஸ் செயலி
- WikisourceEbooksReportஇந்திய மொழிகளுக்ககான விக்கிமூலம் மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்
- FreeTamilEbooks.com – Download counter மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்

**அடுத்த திட்டங்கள்/மென்பொருட்கள்**

- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்

- முழு நேர நிரலரை பணியமர்த்தி பல்வேறு கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்குதல்
- தமிழ் NLP க்கான பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல்
- கணியம் வாசகர் வட்டம் உருவாக்குதல்
- கட்டற்ற மென்பொருட்கள், கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் வளங்களை உருவாக்குபவர்களைக் கண்டறிந்து ஊக்குவித்தல்
- கணியம் இதழில் அதிக பங்களிப்பாளர்களை உருவாக்குதல், பயிற்சி அளித்தல்
- மின்னூலாக்கத்துக்கு ஒரு இணையதள செயலி
- எழுத்துணரிக்கு ஒரு இணையதள செயலி
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- http://OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்
- தமிழ்நாடு முழுவதையும் http://OpenStreetMap.org ல் வரைதல்
- குழந்தைக் கதைகளை ஒலி வடிவில் வழங்குதல்
- http://Ta.wiktionary.org ஐ ஒழுங்குபடுத்தி API க்கு தோதாக மாற்றுதல்
- http://Ta.wiktionary.org க்காக ஒலிப்பதிவு செய்யும் செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுத்துப் பிழைத்திருத்தி உருவாக்குதல்
- தமிழ் வேர்ச்சொல் காணும் கருவி உருவாக்குதல்
- எல்லா http://FreeTamilEbooks.com மின்னூல்களையும் Google Play Books, GoodReads.com ல் ஏற்றுதல்

- தமிழ் தட்டச்சு கற்க இணைய செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுதவும் படிக்கவும் கற்ற இணைய செயலி உருவாக்குதல் ( aamozish.com/Course_preface போல)

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வெளிப்படைத்தன்மை**

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், 100% வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும்.இந்த இணைப்பில் செயல்களையும், இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

# நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**Kaniyam Foundation**
**Account Number : 606 1010 100 502 79**
**Union Bank Of India**
**West Tambaram, Chennai**
**IFSC – UBIN0560618**
**Account Type : Current Account**

**UPI செயலிகளுக்கான QR Code**

BHIM UPI Payments Accepted at

**Kaniyam Foundation**

**Account Number : 606101010050279, IFSC Code: UBIN0560618**

Scan and Pay using any UPI supported Apps

குறிப்பு: சில UPI செயலிகளில் இந்த QR Code வேலை செய்யாமல் போகலாம். அச்சமயம் மேலே உள்ள வங்கிக் கணக்கு எண், IFSC code ஐ பயன்படுத்தவும்.

Note: Sometimes UPI does not work properly, in that case kindly use Account number and IFSC code for internet banking.